50

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞானஸத்வத்ஸனி.

1150
3.23

2 3 AUG 1923
MADRAS

இஃது

சிவநேசச்செல்வர்கள் விருப்பத்தின்படி

ஸ்ரீ சிவசமயத்திருத் தொண்டுபூண்டொழுகும்

அடியார்களில் ஒருவரும்

வேதாந்த சித்தாந்த சமரச சுஞ்ஞான விலாச

சபாபிரசங்கக் கேசரியும்

சென்னைத் திருமயிலை வடகூர் இராயப்பேட்டை

அருட்கவி

இ. ஷ. பா. சங்காசர நாவலரென் றியற்பெயரமைந்துள்ள

" சிவஞானப் பரதேசியாரென்னும் "

சிவப்ரகாச தேசிக சுவாமிகளால்

இயற்றப்பட்டு

—)*(—

கையொப்பக்காரர்களின் நன்முயற்சியினால்

தமது

சென்னை சேத்துப்பேட்டை

ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாஸ அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

——§——

43 - வது ஷூத்தின் திருப்பணியாக கலியுகாப்தம்

5024 க்குச் சரியான துந்துபி ஷு பங்குனி மீ 17 உ

சுவாமி சந்நிதியில் ஷை தேசிக சுவாமிகளால்

அரங்கேற்றஞ்செய்யப்பட்டது

——◆——

1923 ஷு மார்ச் மீ 30 உ

—)o(—

Q23:38 211
N23
180046

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

23 AUG 1923

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞானஸத்வதஸனி.

இஃது

சிவநேசச்செல்வர்கள் விருப்பத்தின்படி

ஸ்ரீ சிவசமயத்திற்குத் தொண்டுபூண்டொழுகும்

அடியார்களில் ஒருவரும்

வேதாந்த சித்தாந்த சமரச சுக்ஞான விலாச

சபாப்ரசங்கக் கோளரியும்

சென்னைத் திருமயிலை வடகூர் இராயப்பேட்டை

அருட்கவி

கி. ஊ. பா. சங்காதர நாவலரென் றியற்பெயரமைந்துள்ள

"சிவஞானப் பரதேசியாரென்னும்"

## சிவப்ரகாச தேசிக சுவாமிகளால்

இயற்றப்பட்டு

—)*(—

கையொப்பக்காரர்களின் நன்முயற்சியினால்

தமது

சென்னை சேத்துப்பேடு

ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாஸ அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

—§—

43 - வது ஷ்த்தின் திருப்பணியாக கலியுகாப்தம்

5024 க்குச் சரியானத் துந்துபி ஞு பங்குனி மீ 17 உ

சுவாமி சந்நிதியில் ஷை தேசிக சுவாமிகளால்

அரங்கேற்றஞ்செய்யப்பட்டது

—*—

1923 ஞு மார்ச் மீ 30 உ

—)o(—



உ

சிவமயம்



2 3 AUG 1923

திருச்சிற்றம்பலம்.

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞான ஸத்வத்ஸனி.

## சிவப்ரகாச பரமசேகர பரீண விஷய தர்ப்பணம்.

ஓம்! பிரணவாதீத மஹாமந்த்ர சொரூப சர்வமங்களாகார பரமானந்த வள்ளலாகிய சிவபெருமானே எல்லாமாய் எப்பொருளிடத்துஞ் சிறிது நீங்காது யாவினுள்ளும் வியாபக மூர்த்தியாய் எங்கணுந் ததாகார நித்தியம்ஸ வடிவுடையவனாக விளங்குந் தன்மையையுடையவனாகவும், சனன மரணமெனும் பிறப்பிறப்பென்று பசுக்களாகிய ஆன்மாக்களென்னுஞ் சீவர்களுக்கேற்பட்டு அவ்வவ்வழியே நசுங்குண்டு கிடக்கத்தக்க ஆசாபாசபந்ததொந்த விந்தனாகார வயத்தனாகுஞ் சடபேதமாகிய அசரசர பதார்த்தமாகாது என்றுமொருபடித்தாய் தனைப்படைப்பா ரொருவருமின்றி யாவற்றையுந் தான்படைத்தாண்டழித்து திரோபவித்து இறுதியிலே சிருட்டிகளின்பேரிற் (கன்றினைக் காக்குங் காராவைப்போலவும், குஞ்சுகளைத் தன் செட்டையிலடைவித்து ஆதரிக்குங் கோழியைப்போலவும், மக்களுக்குத் தன்னுதிரத்தைப் பாலாகவுண்பித்து அம்மக்களாலேற்படுஞ் சகலவிதத் துன்பத்தையும் பொருட்செய்யாதேற்று அனுபவித்து இரங்கும்

தாயைப்போலவும், சன்மார்க்க வழியிலே தன்னையாட்படுத்தி நீதியென்னுஞ் செங்கோலோச்சி சத்தியமென்னுங் குடைப்பிடித்து குடிகளைத் தன் வயத்தனாயாதரித்து தனக்குநேரிடுஞ் சிறியத்துன்பத்தையுஞ் சகிக்க முடியாது வருந்துவான்போன்று, அன்னியஞ் சொந்தமென்ற இருபாகுபாடாகியப் பிரிவினையென்னும் அஞ்ஞான புத்தியின்றி யாதொரு சீவருக்குந் துக்கத்தையுண்டாக்காது, ஏதோ தெய்வ சங்கற்பத்தாலோர்கா லேற்படினும் அதற்காக ஆற்றமுடியாது கசிந்து; இதக்கம்பாராட்டி அவை மாறுவதற்கான வழிபாடுச்செய்யும் அரசனைப்போலவும், பல சிகிச்சையினாலுந் தீராது வாதனையையுண்டுபண்ணும் பெருநோயை தலையெடுக்காது நிவர்த்தித்து சுகத்தைக்கொடுக்கும் ஔடதம்போலவும், சகலான்ம கோடிகளுக்கும் சம்ரட்சண்யமாகிய பெருமானுக பஞ்சகிருத்தியத்தில் ஐந்தாவதுத் தொழிலாகிய அநுக்ரஹமென்னும் காருண்யத்தை நடத்திவைக்குங்கருணையங்கடவுளாகிய பரசிவப்ரபுவே மெய்ப்பரமென வேதாகம புராணேதிகாச மஹாவாக்கிய வுபநிடத முதலாகிய சுருதி ஸ்மிருதிகள் எண்ணிலாதனவாயெடுத்தோதாநிற்கும், அப்பரம் பொருளாகிய சிவமே; பிர்மா, விஷ்ணு, ருத்திரன், மகேச்சுரன், சதாசிவம், எனநின்று சிருட்டி, திதி, சம்ஹாரம் திரோபவம், அநுக்ரஹம் ஆகிய பஞ்ச தொழினடத்திவைக்குங் கர்த்தாவாக விளங்குவான். இதையாதரித்து;

## கடவுள் எண்குணத்தையுடையவனெனல்.

---

தன்வயத்தவன் றாயவுடம்பினன் றானியற்கை யுணர்வினனாகுதல்
பன்னுமுற்ற வுணர்தலியல்பினன் பாசநீக்குதல் பேரருளாகுதல்
மன்னுமீறில வாற்றலுடைமையும் வரம்பிலின்பமு மாகிய
வேண்குண மின்னதாகச்சைவாகம மோது
மீசன்றனை யெப்போதும் வணங்குவாம் எனவும்.

வள்ளலார் சாத்திரம் பதிவிளக்கம்.

" நிராமயமாய் நிட்களமாய் நித்தியமாய் நின்மலமாய்ப்
புராதனமாய் சஞ்சலமாய்ப் பூரணமாய்ப் புனிதமாய்ச்
சராசரமாய்ச் சாக்கியமாய்ச் சத்தியமாய்ச் சித்துருவாய்ப்
பராபரமாய் வெறுவெளியா யிருக்குமந்தப் பரமசிவம்" எனவும்,

" சொல்லாலு மனதாலுந் தொடராத சூக்குமமாய்ப்
பல்லாண்ற கேள்வியரு மீதென்று பகர்வரிதா
யொல்லாத பரஞ்சுடரா யுயிர்க்குயிரா யுண்மையா
யெல்லாமா யல்லவுமா யிருக்குமந்தப் பரமசிவம்" எனவும்,

**தாயுமானவர்.**

“ குலமிலான் குணங் குறியிலான் குறைவிலான் கொடிதாம்
புலமிலான் றனக் கென்னவோர் பற்றிலான் பொருந்து
மிலமிலான் மைந்தர் மனைவியில் லானெவ னவன்சஞ்
சலமிலான் முத்தி தரும்பர சிவனெனத் தகுமே” எனவும்,

**ஸ்லோகம்.**

“ பரமானந்தம் பரமசுகதம் கேவலம் ஞான மூர்த்திம்
நிஸ்வாதீதம் ககன சதுர்சியம் தத்வம் சியாதிலட்சியம்
ஏகம் நித்யம் விமலமசலம் சர்வதா சாட்சிபூதம்
பாவாதீதம் திரிகுணரஹிதம் சிவம் ” எனவும்,

**சிவத்தியாநபத்ததி.**

“ காமிகம் பாதகமலம் யோகஜம் குல்பயோர்யுகம்
சிந்த்யம் பதாங்குளீருபம் காரணம் ப்ரஸ்ருதி த்வயம்
அஜிதம் ஜாநுநோர்யுக்மம் தீப்த முருத்வயம் விபோ:
ஸுக்ஷ்மம் பீஜாத்மகம் ஸுக்ஷ்மம் ஸஹஸ்ரந்து கடிதடம்
ப்ருஷ்ட பாகோம் சுமானஸ்ய நாபி ஸ்ரீசுப்ரபேதகம்
விஜயம் ஜடரம் பாஹூர் விச்வாஸம் ஹ்ருதயாத்மகம்.
ஸ்வாயம்புவம் ஸ்தனத்வந்தம் அனலம் லோசனத்ரயம்
விராகம: கண்டதேச: ரௌரவம் சரணத்வயம்
முகுடம் மகுடம் தந்த்ரம் பாஹவோ விமலாகம:
சந்த்ரஜ்ஞான முரச்சம்போர் பிம்பம் வதன பங்கஜம்
ஜிஹ்வப்ரோத்கீதமீசஸ்ய லலிதம் கண்டயோர்யுகம்
ஸித்தம் லலாடபலகம் ஸந்தாநம் குண்டலத்வயம்
யஞ்ஞோபவீதம் ஸர்வோக்தம் ஹாரஸ்ஸ்ரர்க்க பாரமேச்வரம்
கிரணம் ரத்ந பூஷாஸ்ய வாதுலம் வஸநாத்மகம்
ஏவம் தந்த்ராத்மகம்ருபம் ஈச்வரஸ்ய விசிந்தயேத்
சிவஜ்ஞான ப்ரதம் பும்ஸாம் சிவதர்ம ப்ரவர்த்தகம்
ப்ரணவஸ்ய சமாத்ராபி: வர்ணை: பஞ்சாக்ஷரஸ்யச
வதனம் ஸோருயுகளம் கல்பயேதம்பிகாபதே:” எனவும்,

**மண்டலப்ராஹ்மணம்.**

“ புத்திகுஹாயாம் ஸர்வாங்க ஸுந்தரம், புருஷரூப மந்தர் லக்ஷ்யமித்யபரே, சிர்ஸாந்தர்க்கத மண்டல மத்யகம், பஞ்சவக்த்ரமுமாஸஹாயம் நீலகண்டம் ப்ரசாந்தம், அந்தர்லக்ஷ்யமிதி கேசித், அங்குஷ்டமாத்ர: புருஷோந்தர் லக்ஷ்ய மித்யேகே ” எனவும்,

யோகதத்வோபநிஷத்.

" த்யாயம் சதுர்முகாகாரம், சதுர்வக்த்ரம் ஹிரண்மயம் தாரயேத் பஞ்சகடிகா: ப்ருதிவீஜயமாப்நுயாத் " என பிர்மாவைப் பற்றியும்,

" ஸ்மரந் நாராயணம் தேவம், சதுர்ப்பாஹும் கிரீடிநம், சுத்தஸ்படிக ஸங்காசம், பீதவாஸஸ மச்யுதம், தாரயேத் பஞ்சகடிகாஸ், ஸர்வ பாபை: ப்ரமுச்யதே, நதோஜலாத்பயம் நாஸ்தி " என விஷ்ணுவைப் பற்றியும்,

" த்ர்யக்ஷந்துவரதம் ருத்ரம், தருணாதித்ய ஸங்கிபம், பஸ்மோத் தூளித ஸர்வாங்கம், ஹுப்ர ஸந்நமநுஸ்மரந், தாரயேத் பஞ்சகடிகா, வஹ்நிநா ஸௌநதஹ்யதே " என உருத்திரனையும்,

" தாரயேத் தத்ரஸர்வஜ்ஞ, மீச்வரம் விச்வதோமுகம், தாரயேத் பஞ்சகடிகா, வாயுவத்வ்யோமகோபவேத். மரணம் நதுவாமோஸ்து " என மஹேசுவரரையும்,

" ஆகாசே வாயு மாரோப்ய, ஹகாரோபரி சங்கரம், பிந்துரூபம் மஹாதேவம், வ்யோமாகாரம் ஸதாசிவம், சுத்தஸ்படிக ஸங்காசம், த்ருத பாலேந்து சேகரம், பஞ்சவக்த்ரயுதம் ஸௌம்யம், தசபாஹும் த்ரிலோசநம், ஸர்வாயுதத்ருதாகாரம், ஸர்வகாரணகாரணம், ஆகாசதாரணாத்தஸ்ய, கேசரத்வம்பவேத் த்ருவம், யத்ரகுத்ரஸ்திதோவாபி ஸுகமத்யந்த மச்நுதே என ஸதாசிவ மூர்த்தியையும்,

வரிசைக்கிரமமாக பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், என்பதை பஞ்சகர்த்தாக்களாக உருவகப்படுத்தியது.

## ஸ்ரீமத் – திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம்.

### திரு ஏகபாதம் - திருப்பிரமபுரம்.

—(க)—

பிரமபுரத் துறை பெம்மா னெம்மான்
பிரமபுரத் துறை பெம்மா னெம்மான்
பிரமபுரத் துறை பெம்மா னெம்மான்
பிரமபுரத் துறை பெம்மா னெம்மான்

(இதன்பொருள்) ஞானாகாசமாகிய பராசத்தியான பரிபூரணத்தை மிகவும் வியந்தப் பராசத்திக் கதீதமாகிய சுகமே வடிவாய் முதல், நடு, இறுதி, காணுதவஸ்து எந்தப்பெரியோன்

(உ) மேல் நிலமாகிய ஆகாசத்தின்கண்ணே ஓடப்படாநின்ற கங்கா தேவியை விரும்பித் திருமுடியிலே வைத்தவன் எம்மை நீங்காத நிலைமை யையுடைய எமதுயிர்.

(௩) பிரம ரூபத்திலேயே யெண்ணப்பட்டவென்னை முத்தியிலே விடுகைக்கு அமையாத விருப்பமுள்ளவனுயென்னை யொக்கவந்தவன்

(௪) பிரமபுரமென்ற திருப்பதியிலே யுறையப்பட்ட கர்த்தாவானவரென்னுடைய சாமி (என்றவாறு)

பெரியோனும் எனக்குயிரானவனும் என்னை யொக்கவந்தவனும் சீகாழிப் பதியில் வீற்றிருக்குங் கடவுளெனக்கூட்டிப் பொருள் கொள்க

விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன் (௨)

(இ-ள்.) விண்டென்று சொல்லப்பட்ட அஷ்டகுல பர்வதங்களையுமொலி சிறக்கப்பட்ட தரிசு மணியாகவும், அகில லோகங்களையு முள்ளேயகப்படுத்துந் தன்மையவாயு மவ்வாறு பெரிதாயுள்ள திருச்சிலம்பினைத் தரித்துள்ளவன்.

(௨) விட்டுணுவினது புறனுரையாகிய சிவதூடணத்தை யவனிருந்த பொதிநிழலைப் பொருந்தியவன் சொன்ன சிவதூடணத்தை விரும்பாநின்றுள்ள மூன்று புரங்களையுஞ் சங்கரித்துள்ளவன்.

(௩) தேவர்களது கற்பகச்சோலையின் மலர்களைக்கொண்டு சூட்டி பூசிக்கப்பட்ட

(௪) தேவேந்திரன் வேணுவழியாகவந்து பூசித்தலால் அரும்புதலையு மலர்தலையுமுடைய மலர்ச்சோலை சூழ்ந்த திருவேணுபுரமென்னுந் திருப்பதிக்குக் கர்த்தாவாயுள்ளவர் (என்றவாறு)

புண்டரிகத்தவன் மேவிய புகலியே
புண்டரிகத்தவன் மேவிய புகலியே
புண்டரிகத்தவன் மேவிய புகலியே
புண்டரிகத்தவன் மேவிய புகலியே. (௩)

(இ-ள்.) இதைய கமலத்திலிருந் திடையறு வானந்தம் பொழியப்பட்டென்னை மலபோதத்திற் றள்ளாம லெனக்கடைக்கலமாயுமுள்ளவன்.

(௨) ஆத்மாக்களுக்கு இரக்ஷையாக முண்டம்பொலிந்த திருநீற்றையணியப்பட்ட மிக்ககருணையாளனே யான்பாடும் பாட்டையுகந்துள்ளவன்

(௩) புலியுருவாகிய வடிவைப் பொருந்திய தபோதனனுகிய வியாக்ரமபாத முனிக்கு ஞானானந்தமாகிய நாடகத்தைக் கனகசபையிலே யாடற் செய்யும் பரதவித்தையைக் கற்பித்துள்ளான்.

(௪) லீலைகளெல்லாஞ் செய்யப்பட்ட சிவன் தனதிச்சையாற் பொருந்தியிருக்கும் பிர்மாவானவன் பூசிக்கப்பட்ட புகலியென்னுந் திருப்பதியே. (என்றவாறு)

விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்.      (ச)

(இ-ள்) கன்றுகுணிலாக விளவின் கனியெறிந்த நாரணனை பிரகாசஞ்செய்யப்பட்டு நின்மலமாயிருந்துள்ள தனது பெரிய திருமேனியிலே யொன்று பாதியாக வைத்துள்ளான்.

(உ) மாறுபாடாய்க் கதறப்பட்ட பௌத்தனது தலையிலே அக்கினியைக்கான்று சொரியப்பட்டுள்ளதாய் மிக்க பயத்தோடும் விழுகின்ற வுருமென்கின்ற பெயரையுடைய இடியையேவிப் பௌத்தரை வேறறுத்தானுந் தானேயன்றி யானன்றாகும்.

(ங) இனித்தனது பரிபூரணத்திலே தன்னையிழந்து இரண்டாய் விசவமுருசிக்கத்தான் விஷமாகத் தூஷணப்பட்டு நிற்கின்றவெனக்குக் குருமூர்த்தியாய்வந் தென்பிறவியையொழித்துத் தனது பேரின்பமாகிய பரிபூரணத்திலே எனதடிமை குலையாமலிரண்டற வைத்தவன்.

(ச) இனிக் கீழ்ச்சொல்லிப்போந்த செய்திகளெல்லா முடையவனெத்தன்மையனேனென்னில் எங்கும் பிரகாசியாநின்ற கீர்த்தி சிறக்கப்பட்டுள்ள வியமனுர் பூசிக்கப்பட்ட திருவெங்குருவென்னுந் திருப்பதியை விரும்பியுள்ளவன்.      (என்றவாறு)

சுடர்மணி மாளிகை தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகை தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகை தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகை தோணி புரத்தவன்.      (ரு)

(இ-ள்) இனிச் சுடு நிலமாகிய மயானத்தை கடமாடு மிடமாகக் கொண்டு மீதொழிந்து முப்புரங்களையு மவஞ்செய்து சுடப்பட்டவெற்றிப் போரையுடைய தும்பைமாலைக் கடவுள்.

(உ) எனதுச்சிக்குச் சூடாமணியுமா யெனமேல்வைத்த மாலினையுடையனுமா யாகத்தின்கண்வந்த யானையை வடிவழித்துப்போக்குந் தன்மையையுடையவன்.

(ங) ஆதித்தனது களங்கத்தைக் கழுவப்பட்ட சமுத்திரம்போன்ற சென்மக் கடலிலே வீழ்ப்பட்டழுந்திக்கெடாநின்றவாத்மாக்களுக்குக் கைப்பற்றிக் கரையேறுந் தெப்பமாகப் பிரணவமென்கின்ற மந்திரத்தை அவரது செவியின்கண்ணே யுண்டாக்கா நின்றவன்.

(ச) விளக்கத்தை யுடைத்தாய் நவரத்தினங்களாலே யலங்கரிக்கப்பட்ட மாளிகைசூழ்ந்த திருத்தோணிபுரத்தின்கண்ணே வாழப்பட்ட சிவனித்தன்மையன்.      (என்றவாறு)

பூசுரர் சேர் பூந்தரா யவன் பொன்னடி
பூசுரர் சேர் பூந்தரா யவன் பொன்னடி
பூசுரர் சேர் பூந்தரா யவன் பொன்னடி
பூசுரர் சேர் பூந்தரா யவன் பொன்னடி. (சு)

(இ-ள்.) பூமியிலுள்ளோரையுந் தேவ கணங்களா யுள்ளவரையுந் தனது நாபிக்கமலத்திலே தோற்றுவிக்கப்பட்ட பிர்மா, விட்டுணுவினது போதத்திலே கண்ணாடியு நிழலும்போலப் பிரதிவிம்பியாகின்றவன்.

(உ) மலத்திரயங்களைக் கழுவப்பட்ட சிவஞானிகள் திரட்சிப் பொலிவு பெறப்பட்ட வனப்பையுடைய வானந்த நிருதத்தையுடையவன்.

(ங) சர்வாங்கம் உத்தூளணம்பண்ணின மார்பையுடைய சிவஞானிகளுமாய் புண்ணிய பாவக்கட்டை யரியப்பட்டு; விசுவத்தைத் தள்ளப்பட்ட சிறப்பையுடையருமா யிராநின்றவர்க்கு யிகுதிப்பட்ட மூலமாயுள்ளவன்.

(ச) மறுவிலா மறையோர் வாழ்கின்ற. திருப்பூந்தரா யென்னுஞ் சீகாழித் திருப்பதியின்கண் வீற்றிராநின்ற சிவனது அழகியத் திருவடித் தாமரை யென்னை யாண்டிடுவதாக'

செருக்கு வாய்ப்புடையான் சிரபுர மென்னில்
செருக்கு வாய்ப்புடையான் சிரபுர மென்னில்
செருக்கு வாய்ப்புடையான் சிரபுர மென்னில்
செருக்கு வாய்ப்புடையான் சிரபுர மென்னில் (எ)

(இ-ள்.) தனதுத் திருவடிப் பிரசாதமில்லாதார்க்கு மலமயத்தின் மேலீட்டைக் கெடாத சிவனுக்கு விசுவாதீதமான விருப்பிடமெனது சைதன்னியமே.

(உ) விசுவத்தி லுணவு பண்ணுநின்றுள்ள நாராயணனது களேபரத்தைத் திருமேனியிலே தரித்துள்ளான்.

(ங) ஆத்மவிகாரமாகிய செருவத்தாலே யிந்திரியங்களுக்கு விடையமாகிய சுவர்க்கத்தி லிச்சையுடையானுக்குச் சுவர்க்கமோவென்னின் மிகவும் விசேஷித்திருக்குமன்றே.

(ச) இந்திரிய வண்மையாகிய யுத்தத்தி லதற்கிளையாம லிந்திரியமாகின்ற பாணங்கள் தனதறிவுக்குட் படைக்கப்படான் ஒருகாற் சிரபுரமென்றுரைசெய்தவிடத்துப் பொறிவாயிலிவ்வைந்தினையுமவிழப்பொருது சிவனுடைய சீர்பாதத்திலே அடையாகிற்பன (என்றவாறு)

பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்

பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன். (அ)

(இ-ள்) பொலிவினையுடைய மாயாகிருத்தம் புரியப்பட்ட பத்திர காளியும், பூதப்பசாசும், பொருந்தப்பட்ட மசானமே திருக்கோயிலாக வுள்ளவன்.

(உ) சுத்தமான வழியைத் தரப்பட்ட மகாவிருடிகள் திரண்டு தபசு பண்ணுகிற்கு மாரணியத்தின்கண்ணே தனித்துத் தவம் புரியாகிற்குந் தபோதனன்.

(ங) அழகிய வாபரணங்களா லலங்கரிக்கப்பட்டுள்ள விருடிபாமிகள் பிக்ஷையிட வந்தணையுமிடத்துத் தனக்குள்ள திருவாணத்தை அவர்களுக் குக் கொடுக்கப்பட்டவன்.

(ச) பொன்னுற் செய்யப்பட்ட பாடக நூபுராதிகளைப் பாதங்களி லே யணிந்துள்ள கன்னியர்த் திரண்டு விளையாடப்பட்ட புறவமென்னுந் திருப்பதியில் வாழ்கின்ற சிவன் (என்றவாறு)

தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான். (க)

(இ-ள்,) ஆத்துமாக்களிடத்துக் கருணைப்பிறக்குமிடமாயுள்ளவன் அக்கினி வீசப்பட்டுத் திருவரையிலே யழுந்தச் சாத்தியுள்ள விரிந்த படத் தினையுடைய பாம்பை அரைஞாணுகவுடையான்.

(உ) எல்லாயிறந் தந்தமாயுள்ள சிவஞானிகள் குழாத்துக்கு நேரிதாகி யச் சூனியமாயுள்ள பொருளைத் தோற்றுவித்துள்ளானுமாய்த் தாக்கென்ற பெயரையுடைய வூன்றுப் புலியினதுதோலைத் திருவரையிலே பொருந்த தரித்துள்ளான்.

(ங) ஆத்ம விகாரமான வகங்காரம்போம்படி யென்னறிவிலெதிர்ப் பட்டவன். கயிலாயமென்னுந் திருமலையைத் திருவுள்ளத்தடைத்தெழுந் தருளியிருந் தாத்மாக்களை யிரட்சிக்கப்பட்ட விசேஷ ஞானத்தையுடையவ னென் றேத்தும் சட்சமயங்களுக்குமவரவர் கொண்ட பயனுயுள்ளவன்.

(ச) இராவணனது பத்துத் தலைகளு முறியத் திருவிரலா லடக்கப் பட்டவனுரென்னில்? சண்ஷபயென்னுந் திருப்பதியிலே வாழப்பட்டுள்ள கடவுள். (என்றவாறு)

காழியா னய னுள்ளவர் காண்பரே
காழியா னய னுள்ளவர் காண்பரே

காழியா னய னுள்ளவர் காண்பரே
காழியா னய னுள்ளவர் காண்பரே. (கo)

(இ-ள்.) நிலைபெற்று நின்மலமாகிய சித்தத்தையுடைய பத்தரிடத்துச் சத்தியமாகிய பொருள் விளைவான்பொருட்டு; ஞான நாட்டத்திலே அவர்களைக் கடாக்ஷிக்கின்றவன்.

(உ) திருமிடற்றிலுண்டாகிய களங்கத்தையுடையவனது கருணையை நினைத்து ஞான நாட்டத்தையுடைய சிவஞானிகள் சிவனுக்கிச்சை, தனதடியார்க் காங்காரத்தைத் தடுக்குமதே பணியென்று தமதறிவிலே கருதா நிற்பர்.

(ங) விட்டுணுவும் பிரமாவுந் திருவடியுந் திருமுடியுங் காண்பான் பொருட்டு; வராகமு மன்னமுமாகக் கருதி வடிவுகொண்டால் ஐயோ! உள்ளபடிக் கருதிச் சிவனைப்பெருமலிவர் கருதியதேதென்னில் அன்னியமே கண்டார்.

(ச) என்பொருட்டாற் காழி யென்னுந் திருப்பதியைப் படைத்தானை, என்னையனை, எனதாசையைக் கீழ்ச்சொன்ன விருவர்களுந் தாங்கள்தேடுந் தேட்டப்பிரிவின் மயக்கத்திலே தேட்டமழித்துத் தோன்றாநிற்பவனைத்தேடி மறத்தலொழிந்தெவ்வாறு காண்பாரிவர். (எ-று.)

கொச்சை யண்ணலைக் கூடகிலாருடன் மூடரே
கொச்சை யண்ணலைக் கூடகிலாருடன் மூடரே
கொச்சை யண்ணலைக் கூடகிலாருடன் மூடரே
கொச்சை யண்ணலைக் கூடகிலாருடன் மூடரே. (கக)

(இ-ள்) ஆணவ மலத்துடனே கூடியுள்ள மயக்கத்துடன் மாறுபட்டோர்கள் மாயா தனுவாலு மந்திர தனுவாலு மறைக்கப்பட்டார்கள்.

(உ) புலால் நாற்றத்தைப் பொருந்திய வழுக்கு, மெய்யைப் பொய்யென்று மனங்கொள்ளமாட்டாம லதுவே தமது நிலைபெற்ற வுருவாக நினைத்துத் துவராடையாலே உடம்பைச் சுழப்பட்ட பௌத்தரும்,

(ங) பேதைத் தன்மையையுடைய மற்சிய கெந்தையாகின்றவளது மலத்தைக்கொள்வான்பொருட் டவளது சரீரமெல்லாஞ் சுகந்த மொய்க்கும்படியவளுடனே பொருந்தப்படாநின்ற பராசரனாகிய மகாவிருடிவந்து சிவனைப்பொருந்தி யர்ச்சிக்கப்படுதலால்

(ச) பராசரன் பூசிக்கப்பட் டவன்பெயராலே பெயர்பெற்றுள்ள கொச்சைநகரென்னுந் திருப்பதியிலே யெழுந்தருளியிராநின்ற தலைமையோனை யுள்ளபடி தெரிசனம்பண்ணி வழிபடமாட்டார்களது நினைவெவ்வாறிருக்குமென்னில் மழைக்காலிருளும் வெளிதென இருண்ட மயக்கத்தையுடைய வாணவபோதகமாயிருக்கும். (என்றவாறு)

கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை. (கஉ)

(இ-ள்) மிகுதிப்பட்ட தோஷமாயுள்ள சுக்கில சுரோணிதமாகிய இருவகை நீரின்கண் பதிந்து விளைதற்குள்ள நீயுமாயந்தக் கெற்பாசைய நீரின்கண்ணே சிரமுதலாகிய அவயவமாகத்தோன்றிப் பூமியின்கண் செனித்துப் பரிணமித்துப் பின்பு தேய்ந்து மரிக்கின்ற சென்மத்தையும்,

(உ.) தனது பாதியாகிய திருவருளிலே என்னை யகப்படுத்திக் கவுளிகரித்துக்கொண்டந்த வருள்வழியாக வெனதிடத்தி லிடையறாமல் வாழுந்தன்னை எனக்குத்தந் தடிமைக்குலையாம லெக்கண்ணும் விட்டு விளங்கும் கர்த்தர்.

(ங.) மாயா மயக்கத்தின்கண்ணே மயங்கிப் பெத்தமுத்தி யிரண்டுந் தெரியாமல் திண்டாடப்பட்ட மலபோகர்க்கு அமுதம்போன் றரிதாயுள்ள வனுமாய் விட்டு விளங்கப்படாநின்ற பொன்னுருவையுடைத்தாய்ச் சிருட்டிக்குக் கர்த்தாவாகிய பிரமாவினது சிரக்கபாலத்திலே பிச்சைக்கொண்டு நகரும் கருணையாளனே !

(ச) திருக்கழுமலமென்னும் மூவாப்பழங்கிழமைப் பன்னிருபெயர் பெற்றுள்ள அனாதிமூலமாகிய பதியிடத்துக் கவுணிய கோத்திரத்திலே தோன்றப்பட்ட யான் நிவேதிக்கப்படும் காட்டாகிய இப்பாடலைச் சீழ்ச் சொன்னவற்றிலு மலத்திரயங்களிலும் அழுந்தாநின்ற ஒருத்தராகிலும் பலராகிலும் உரைசெய்வார் உயர்ந்தாரே யாதலாலிப்பாடலை யிடைவிடாம லுரைசெய்வீராக (என்றவாறு)

---

## ஸ்ரீகாழி - திருமாலைமாற்று.

யாமாமா நீயாமாமா யாழீகா மாகாணுகா
காணுகா மாகாழீயா மாமாயா நீமாமாயா. (க)

(இதன்பொருள்.) யாமாமா - எனது ஆத்மபோத சேட்டையுங் கருவிகளின்சேட்டையும் இவைகளால் அவைகள் ஆமாறெவ்வாறென்னில் நீயாமாம் - அறிவுக்கறிவாய் நிற்கின்ற நினது சேட்டையொழிந்து வேறொன்றற்ற சற்காரியமாயுள்ளவனே ! மாயாழீ - மிகுதிப்பட்டு மேலாயிருந்துள்ள நாதசொருபமா யிராநின்ற யாழையுடையானே அத்தன்மை மிகுதிப்பட்டு நலஞ்சிறந்துள்ள யாழையிடைவிடாமல் தடவி வாசித்தலால்

மசாநல்ல வீணை தடவியென்றும் பொருள் கா - இது இடைநிலை மாகா ஞகா - பரமாகாசத்தைக் கீழ்ப்படுத்தப்பட்டு மலைகளுக்கெல்லாங் குலமலை யாகிய ஸ்ரீ கயிலாயத்தின்கண்ணே யெழுந்தருளியிருப்பவனே! காஞகா- என்னுள்ளக் கண்ணுக்குத் தோன்றப்பட்டுள்ளத் திருமேனியையுடையானே மாகாழீயா - ஊழிகாலத்தின்கண்ணும் அழிவின்மையாகிய மேன்மையைப் பொருந்தியுள்ள காழியையுடையானே மாம் - ஈங்குனதருட் பெறாத சீவவிழப்பை யுடையவனாகிய வெம்மை ஆயாநீ - இடபவர்கனத்தின்கண்ணே ஏறிவந்தெனக்குப் பொய்கைக் கரையின்கண்ணே வெளிப்பட்டவனே மாமாயா - மாமாயையாகிய குடிலையைக்கொண்ட சுத்த மாயையிலுள்ள தத்துவங்களையுண்டாக்கி கன்மம், பொசித்தல், காரணமாகத் திரோதாயி சத்தியாலே மறைத்துள்ள மயக்கமே யறிவாகப் பெத்தத்தைச் செலுத்தப்பட்டவனே! இடையே நிருத்தின கா - அந்த மாயா மயக்கம் எனதறிவிற் சீவியாமல் ஒழித்து உன்னை எனக்குள்ளபடிதந்து என்னைநீ நிகழாமற்கொண்டு இவ்வாறுநீ யிரண்டறவாழ்ந்து இரட்சிப்பாயாக (என்றவாறு)

யாகா யாழீ காயாகா தாமா ராரா தாயாயா
யாயாதா ராரா யாதா காயாகா ழீயா காயா. (உ)

(இ-ள்) யாகா - இடைவிடாது தீக்ஷையாக வுனது தீண்டற்கரிய ஸ்ரீபாதத்தினகண்ணே சிவாக்கினியைக்கொண்டெனது மலத்திரயங்களையும் விமோசனஞ்செய்யாநின்றவனே! யாழீ - பரநாத முதலாகிய மந்திர யாழை இடைவிடாம லாத்தும வுபதேசமாக வாசியாநின்றவனே காயா - மானைக்காட்டி மானைப் பிடிப்பார்போ லெனது கட்புலன் வெளிப்படத் தோன்றி யென்னையுனது சாம்பவமாகின்ற பார்வையினாலே பார்க்கின்றவனே கா - எந்தக் கடனிலை தாயாரார் - உன்னையொழிய என்னை யீன்றாரார் வேறுளரோதான் ஆராதாயி - உனது பேரானந்தத்தை யுனதருட் பெற்றா ரனுபவிக்குமிடத் தீறு, நடுவு, முதலுமற்றிருந்துள்ளவனே ஆயாய் - கீழ்ச்சொன்ன முத, னடு, விறுதியில்லாத பேரின்ப மிடையறாமல் விளைவான்பொருட்டுத் திருவுள்ளத்தடையாய் ஆயாதார் - அத்தன்மைத் திருவுள்ளத்தடைக்கப்பட்ட காருண்ய சத்தியாகிய விருட்சத்திற் காதாரமாயுள்ளவனே! ரா - எனக்கு ஞானனந்த ஐஸ்வரியமாகிய விருநிதியமாகின்றவனே யாதாகாய் - கீழ்ச்சொல்லிய போன்ற பொருளியாவு நீயாயிருத்தலாலு மெனக்கு விசுவமாகத் தோற்றப்படாத சித்துக்களு மெனக்கு நீயேயாயிருத்தலா லியாரு மியாவையுமாகாநின்றவனே ஆ - இவ்வாறுயிர்க்குயிராய் நிற்கின்ற உன்னை யெல்லையில்லாக் காலமாக விழவாதிருப்பதே யாகாழி - என்போல்வாரை இரட்சித்தற் பொருட்டாகக் காழியென்னும்

பதியைப் படைவீடாகப் படையாகின்றுள்ளவனே! ஆகாயா - ஞானாகாசமே திருமேனியாகவுடைய நீ செய்யும் விந்துந் தரித்தாற்போலத் திருமேனியில்லாத திருமேனியுடையானே கா - இத்தன்மை வடிவில்லாத நீ வடிவானகையா லெம்மிடத்தில் வடிவுவந்தடையரம லிரட்சிப்பாய் (எ-று)

தாவா மூவா தாசா காழி நாதா நீயா மாமா
மாமாயா நீதா நாழி காசா தாவா மூவாதா. (௩)

(இ-ள்.) தாவா - ஆத்துமாக்களுக்கு சடைகட்டித் தவசு பண்ண ஞானமின்மையா லவர்பொருட்டாகக் கட்டப்பட்ட அருளோங்குஞ்சடையனே மூவாதாசா - எப்போது மருணபாவத்தை யடைந்திருக்கப்பட்ட தீர்க்காயுளையுடையவனே காழீநாதா - காழியென்னுந் திருப்பதிக்குச் சுவாமியாயுள்ளவனே நீயாமாமா - எனக்குள்ளதாகிய மல பாபத்தை யொழித்துனது சிற்சொரூபத்திலே செறிந்து மீண்டு வாராவழியாகிய நீ அத்தன்மையை யருளுவாயாக மாமாயா - மிகுதிப்பட்ட மாயையாலே மயங்கியுன்னை யடையும்படி திருவுள்ளத்தடையாமல் நீதா - கருணையாளனாகிய நீதானுனதருளைத்தந்து பிரிவுதோன்றும லிரட்சிப்பாயாக நாழிகாசா - கடற்பயின்ற கறையினை நினது கண்டத்தே தரித்துள்ள கருணையாளனே தாவாமூவாதா - ஒருகாலத்திலுங் கேடற்ற மூப்பின்மையை யடைந்துள்ள வூழிக்கண்டாகிய உனது நித்தத்துவத்தை யுன்னை யிரண்டற வடைந்த வெனக்குத் தருவாயாக (என்றவாறு)

நீவா வாயா காயாழி காவா வானே வாராமே
மோரா வானே வாவா காழி யாகா யாவா வாநீ. (௪)

(இ-ள்) நீவா - பதமுத்தியாகிய சாலோக சாரூப, சாரூபங்கள் மூன்றுமுனதருட்பெற்ற வெனக்குச் சமமாகத் தோற்றுதலாற் பராசத்திக் கதீதமாகிய நின்னைத் தருவாயாக வாயாகா - அடியேன் விண்ணப்பங் கேட்டருளிய வெனக்கு மொழியுமொழியாகிய வுனது மவுன வாசகத்தை யருளிச்செய்யாததென்னை? கருணையோ! ஆழி - வேதத்தொலிகொண்டு வீணைகேட்கின்ற தன்மையை யுடையானே காவா வானே வாராமே - இரட்சிப்பாயாக சுவர்க்காதியின்பங்களோ வென்னிலவையீற்றி லெனதிச்சையை நீ யெழுப்பாம லிரண்டறவுனது திருவடியின்கண்ணே யெனக்காராத காதலையருள்செய் மோராவானேவாவா காழி - எனக்காத்ம லாபமாகிய தன்மை சுவர்க்கத்திலுண்டாகிய சுகமோ தருவதாகத் திருவுளங் கொண்டிருக்கின்றீரையோ ஈதென்ன காருண்யமோ காழியின்கண்ணே யென்பொருட்டாற் றிருமேனிகொண்ட கருணையாளனே ஆகாயா வாவா நீ - ஞானாகாசமாகிய காருண்ணிய சத்தியையுடையானே அந்தச் சத்தியுங் கழலப்பட்ட வுன்னோ ராராத காலத்துடையார்க்கந்த காதலுக்குப்

பயனாகிய நீயே வந்து தன்னை விடாய்த்தண்ணீர்க் கொடுக்குந் தன்மைப் போல வெனது ஜன்மபரிதாபத்தைத் தீர்ப்பாய். (என்றவாறு)

யாகாலாமே யாகாழி யாமேதா வீதாயாவி
வியாதா விதாமே யாழீகாயா மேலாகாயா. (௫)

(இ-ள்) யாகாலாமே - தேவரீர் சிவதருமமாக வருளிச்செய்யப்பட்ட சரியை, கிரியை, யோகம், ஞானமென்று சொல்லப்பட்ட நாலு பாதத்திற்கு மடியேன் பிராரத்துவனல்லனாகையால் ஆதியிலே யிரண்டற நிற்கப்பட்ட ஞான நிலையுடனே ஐந்தாம் பாதமாகத் திருவுளம்பற்றிக் காருண்ணியஞ்செய்யு மூய்யுநிலைபோலாம் யா - ஈதொழிந்தெனக்குக் கீழ்ச் சொல்லிப்போந்த சதுர்வித க்ஷேமங்களிலுஞ்செய் தீவினையாது காழீ - காழி யென்னும் பதியின்கண்ணே யென் பொருட்டாகத் திருமேனிக் கொண்ட கருணாலயனே யாமேதா - இவ்விடத்தில் விண்ணப்பஞ்செய்த விண்ணப்பமடியேனால் விண்ணப்பஞ்செய்தற்கு யான்யார்? உனது சேட்டையா லழுந்தியிருந்தவர்க் கென்னப்படும் ஆவீ - எனது போதத்துக்கு மூல சேட்டையாயுள்ளவனே தாயாவீ - எனதுயிர்க்குயிராய் நின்றவனே வீயாதா - எனதறிவுக் கறிவாய்நின்ற சத்காரிய தெரிசனமானது அடியேனுக் கிடையற்றழியாதக் காதலைத் தருவாயாக ஈதாமே - அடியேன் விண்ணப்பமுந் திருவுள்ளப் பக்குவமே ஆழீ - ஞானானந்தமாயுள்ள முதனடு விறுதி காணாத பேரின்பக்கடலே! காயா - என்னைப்போல திருமேனிக்கொண்ட கருணையாளனே மேலாகாயா - எடுத்தருளிய திருமேனியிற் றோயாமற் பரிபூரண போதாகாசமாய் நிற்குந் தன்மையை யனாதியாகவுடைய கர்த்தாவாகின்றவனே. (என்றவாறு)

மேலே போகாமே தேழீ காலாலே காலானாயே
யேனா லாகா லேலா காழி தேமேகா போலேமே. (௬)

(இ-ள்.) மேலேபோகாமேதேழீ - தேவரீரது திருவருளினைவிடாமல் என்னறிவிலேநின் றறிவிக்கின்ற நிலையையிழந்தெனது செயலைக் கீழ்ப்படுத்தி யெனது போதமேலிட்டுன்னையிழந்து சென்மத்திலேயுழன்ற நாளமையுமத் தன்மையாகி உன்னைப் பின்னிட்டெனது போதமானது சீவியாநின்ற வசத்திய நிலையைத்தள்ளி உன்னைமுன்னாக்கி யுள்ளபடியே யென்னைப் பின்னிடுவாய் காலாலே காலானாயே - தசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகசமார்க்கம், சன்மார்க்கமென்று சொல்லப்பட்ட நாலு பாதங்களாலே உன்னை யடைவார்க்கு வழிசெய்திருந்தாயாகிலும் ஏனாலாகா லேலா - கீழ்ச்சொல்லிப்போந்த நாலு பாதத்தாலும் உன்னை வழிபடுதலடியேற்கியாது காழீ - என் ஜென்ம மொழித்தலுக்குக் காரணமாகக் காழி யென்னும் பதியை யுவந்திருந்துள்ளானே தேமே காபோலேமே - அடி

யேற்கு நீ யநுக்ரஹிக்க வேண்டுவ தென்னுடைய சரீரமான வெனதாத்மாவை விட்டு நீங்காததுபோலவும், எனதுயிரானது சரீரத்தை நீங்காதது போலவும் அத்தன்மையொத்த அத்வீதமா யெனதறிவிலே யொழியாமற் பொருந்தி வாழ்வாயாக. (என்றவாறு)

நீயாமா நீயேயாமா தாவேழிகா நீதாநே
நேதாநீ காழிவேதா மாயாயே நீமாயாநீ (எ)

(இ-ள்) நீயாமாநீயேயாமாதா - பதமுத்தியாகின்ற முத்திகளெல்லாங் கழித்தனது சத்தியாகிய சுகாதீதத்தி ணக்கண்ணுவித்த நெய்க்குக் கோதற்றாற்போலவும், பாலேடு வருகத் தண்டற்றாற்போலவும், அத்வீதமாகிய நீ நானாகும்படியும், தாசோகமாகிய நான் நீயாகும்படியும் அநுக்ரஹிப்பாயாக; ஏழி - சத்தகோடி மகாமந்திரங்களுக்கு பிராணனுயுள்ளவனே கா - இடைநிலை நீதானே நேதாநீ - அடியேனென்னை யொழியப்பட்ட கருவியுபாதிகளனைத்தும் ஈதல்லவீதல்லவென்றும் நியதிபண்ண வுனதருளைத் தருவாயாக காழி - காழியென்னும் பதியையுடையவனே வேதா - சதுர்வேதங்களுக்கும் அந்தமாயுள்ளவனே மாயாயே நீமாயாநீ - ஒரு காலத்திலேயும், அழிவற்றிருந்துள்ளானே, மாயாசத்தியைக்கொண்டு என்னை மயக்காமல் போதத்திலே யென்னைத்தள்ளும் மாயங்களைய வல்லவனே! எனதுமயக்கத்தை உனதுகாருண்ணியத்தினாலே ஒழிப்பாயாக (எ-று)

நேண வராவிழ யாசைழியே வேகதளேரி யளாயுழிகா
காழியுளா யரி ளேதகவே யேழிசை யாழவி ராவணனே. (அ)

(இ-ள்.) நேண வராவிழ யாசைழியே - உனக்குத் திருவரை ஞான நிருவாணத்தை மறைக்கப்பட்ட பரிவட்டமும் மாசுணமாகவிரும்பியுள்ளவனே வேகதளேரி யளாயுழிகா ஆர்வச்செற்றக் குரோதமாகிய எங்களைத் தள்ளப்பட்டுள்ள வழகிய ஞான சத்தியுடனே யளாவி யிரண்டறக் கலந்த கருணையாளனே என்னையுமந்த ஞானசத்தியினிடத்திலே நிறுத்தி யுன்னையொழிய விசுவந்தோன்றும விரட்சிப்பாயாக காழியுளாய் - சாழியென்னூர் திருப்பதியிற் பத்தருக்கு நித்தியமாக நின்றவனே அரிளேதகவே - உனதருட்கண்ணை முறைமைபெற எனக்குத் தராநின்றவன் யாரோவென்னில் ஏழிசை யாழ விராவணனே - ஏழிசையும் பொருந்தப்பட்ட யாழையுடைய விராவணனாகின்றவன். (என்றவாறு)

காலே மேலே காணீ காழி காலே மாலே மேபூ
பூமே லேமாலே காழி காணீ காலே மேலேகா. (கூ)

(இ-ள்.) காலேமேலே காணீ காழி - உனது திருவடியுந் திருமுடியுங் காண்பான் பொருட்டாகக் காழியுலுள்ளானே காலேமாலே மேபூ -

உனது சீர்பாதந்தேடினு ஞரோவெனில், விட்டுணுவானவன் வராகரூபத்
தைப் பொருந்திப் பூமியிடந்தேடாநின்றான் பூமேலே மாலேகாழிகோணீ
பிர்மாவானவன் அன்னவடிவாய் வயிரங்கொண்டிருவரு மயக்கமே யறி
வாகநின்று மயங்கும்படி கண்டவனே காலேமேலேகா - கீழ்ச் சொன்ன
இருவரையு மயக்கஞ்செய்தாற்போல அடியேனையு மயக்கஞ்செய்வியாதே
யுனது சீர்பாதங்களிரண்டினை யெனதொழிவாகிய வுச்சியிலே தந்தருளி
யிடையறாம லுன்னைத் தந்தென்னை யிரட்சிப்பாயாக (என்றவாறு)

வேரியு மேணவ காழியோயே யேனைநீணேமட ளோகார்தே
தோர்க ளோடமனே நீளையேயே யொழிகா வணமே யுரிவே.

(இ-ள்) வேரியு மேணவ - வெருவுதலை யுடைத்தாகிய மான்கன்
றினைச் சீயத்தத்திலே தரியா நின்றுள்ளவனே காழியோயே-காழியென்
னுந் திருப்பதியை யுறைவிடமாக வுடையவனே ஏனைநிணே மடளோக
மர்தே - வராக ரூபமாக வடிவுகொண்டு பதினாலுலகத்தையும் மையுடைத்
தாகிய ஒருகோட்டு நுனியிலே கொண்ட விட்டுணுவான பெரும் பன்றியி
னது கோட்டினை அவனதாங்காரந்தீரப் பறித்தருளிய பன்றியினது வெற்
றியைக் கெடுத்தருளியது, அப்பன்றியை சிக்ஷைபண்ணி அதனதகங்கா
ரங்கெடுத்தன்றே தன்னையடையுந் தலைமையாரிடத்துண்டாகப்பட்ட ஆங்
காரத்தை யொழிப்பான்பொருட்டாக உனது திருமார்பிலே ஏனமுனைக்
கொம்பு பூணுதலா லிவ்வாறு பன்றிக்கருளிச் செய்ததன்றிச் சர்வாத்மாக்க
ளதகங்காரங்களையுங் கெடுத்தருளாநின்ற கருணையாளனே தோர்களோ
டமனே நீனையேயேயொழி - பௌத்தரையுஞ் சமணரையும் வாதின்க
ணழிவித்தல் நீயேயன்றி யானழிவித்தேனென்னுமெனது தற்போதத்தை
என்னைவந்து பொருந்தாம லுனது செயலே செயலாக என்னுற்றஞ்சிறிது
வராமே லொழிப்பாயாக காவணமேயுரிவே - இவ்வாறெனது தொழிலா
யுள்ள யாவைகளுமுனது செயலாகத்தந்த திடைவிடாம லெனதறிவிலே
நின்று சுவாமி யிரட்சிப்பாயாக வெனதறிவுக்குத் தொந்தமான முத்திகளி
ரண்டினு முரித்தாயுள்ளவனே. (என்றவாறு)

நேரக ழாமித யாசழிநா யேனனி யேனனி ளாயுழிகா
காழியுளா னினயே னினயே தாழிச் யாதமி ழாகரனே. (௧௧)

(இ-ள்.) நேரகழாமித யாசழிநா - மானைக்காட்டி மானைப்பிடித்
தாற்போலத் திருமேனி கொண்டருளி என்னை யொருகாலத்திலும் விட்டு
நீங்கப்படாம லென்னிடத்திலே மிகுதியாகச் சீவிக்கப்பட்ட மலத்திரைய
மாகிய குற்றங்களை அழியாநின்றுள்ளவனே ஏன்நீ-உனது பரிபூரணமான
அணுவுருவ நிலையில் எனக்குண்டான தாசோக நிலையெல்லா நீயே ஏன்நீ
ளாயுழிகா - என்னிடத்திலே நின்று என்னை யொழித்துக் கோதிலா வமு

தாக நீயே வாழப்பட்டென்னைச் சிறிதுந் தோன்றவிடாம லிரட்சியா நின்றவ்ளவனே காழியுளா - இத்தன்மையான பிரமசாயுச்சியத்தை அடியேற்குப் பிரசாதிப்பான் பொருட்டாகக் காழியென்னும் பதியைப் படைத்துளானே யெனவொரு விண்ணப்பத்தைக் கேட்டருள்வாயாக நினையே நினையே தாழிசை - உன்னைச் செய்யுட் கருத்தாகவுடையவிம் மாலை மாற்றென்னும் பெயரையுடைத்துமாய்ச் சித்தாய் விரிந்துள்ள பாடலானது ஆதமிழாகரனே - ஐயோவையோ தமிழுக்குப் படுதுறையாகியயானெனதப் போதத்தாற்பாடிய பாடலென் றுலகத்தா ருரைசெய்வதே யாதலால் நீயறியயான் பாடியதில்லை யென்கின்ற செய்தியுனக்கே நிகழுமாதலால் இப் பாடலையேத்தத் தவஞ்செய்தாரும் நீயே யடிமைகுலையாத சாயுச்சியத்தைப் பெறுவார்கள். (என்றவாறு)

இப்பிரபலாவர்த்தனமுடைய பரமசிவமே மெய்க்கடவுளென சதா வழிபடுதலே மக்கட் பயனுடைத்தாம்.

திருச்சிற்றம்பலம்.

---

## பரசிவத் தோத்திரம்.

சர்வமங்கள தேஜோமயமாகிய சிவபெருமானே! நித்ய கல்யாண குண சுந்தரனே நீலகண்டமும் மான்மழுவும் வரதாபய கரங்களும் சதுர்ப் புயமும் நெற்றிக்கண்ணும், நிலவணி சடையும் பார்வதி பாகமுமுடைய பரமசிவமே! மஹாதேவனே, அரனே, இடபவாஹனனே, சமஸ்தலோக காரணபூதராகிய பரமேஸ்வரனே! பஞ்ச கிருத்திய காரணமாக ஆனந்தத் தாண்டவம்புரியும் எம்பெருமானே! பரமபதியே! கருணாநிதியே! அண்டரண்டங்கடந்த ஆதியான சோதியனே கனகாம்பரதர கனகசடாதர கநக சுபாகர கந்தர்ப்பகோடி சதசுந்தர திவ்யப் பரப்பிரம சொரூபமாகிய நடேசப் பெருமானே! சமயாதீதப் பழம்பொருளே! வேதபாதுங்கையனே! எங்கு நிறைந்துள்ள ஞானப்ரகாசனே! உலகெலாம் நிறைந்த வகோசர சுயம்பிரகாசனே! காதிற் குண்டலமும், மார்பிற் பணியும், தொங்கு பொன் வடமாதி யாபரணமும், உடுக்கையும், பீதாம்பரமும், தண்டைச் சிலம்புங்கொண்ட ஆண்டவனே! பால்வெண்ணீற்றனே, வியாக்ரம சர்மாம்பரனே! நிரதிசயானந்தனே! சண்டேசானுக்ரஹனே! பிக்ஷாடனனே! இலிங்கோற்பவனே! சர்வலோக துரந்தரனே! சண்பகசுந்தரனே மறைப்புரவிராவுத்தனே! உருத்திரகோடி தலவாசனே! கிஞ்சிக்ஞர்களுக் கெட்டாத சர்வக்ஞனே சாரங்கபாணிக்குச் சக்கரங்கொடுத்தவனே! வில்வ மாலிகாதரனே! என்புமாலாதரனே! பிரம கபாலமேந்துங்கையனே!

ஆனந்தசாகரமே முத்திமுதலே அத்துவிதசுத்த சொற்பிரகாச தனிப்பரம் பொருளே! வஸ்திராலங்கார ருத்திராக்ஷ கங்கணகடிசூத்ரதரனே! ஆகம வேத புராணவுல்லாச சிவோகமஹேசனே!

அநாதியாய் சாஸ்வத சுயம்புவாய் சுசாதிக விசாதிக சுகதபேதமற்று நான்கு மஹாவாக்கியங்களுக்கு முடிவாய் விளங்கும் ஞானானந்தக்கடலே! சத்து சித்தானந்த நித்திய பரிபூரண குணாகார சுமங்கள நிராலம்ப சுயம்ப்காச பிரபல சுகோதய பரம்பொருளே! பிர்மாதி ஸ்தம்பபரியந்தம் உயிர்க்குயிரானவனே அருட்டருஞ்சத்திய சுகானந்த பரஞ்சுடரே! பக்தியே பொருளாகக்கொண்டு நீகைச் சிவயோக நித்திரையினிற்கும் பெரியோர்கள் கொண்டாடுந் தெய்வமே! எண்பத்து நான்கிலக்கம் யோனிதோறும் புகும் புண்பொதிந்த காமாதிகளை நீத்து தேகமே நானென்னு மபிமானத்தைத் தொலைத்துக் கரணவாதனையைக் கடந்து திருவருட் சொரூபமாய் விளங்கும் உன்னருண்மைத் திருவடியாகிய ஞானச்செல்வத்தை அடியேனுக்கு அநுக்ரஹஞ்செய்ய வேண்டுமையா என்பரமத் தந்தையே! அனாதி கேவலத்திலழுந்தி அஞ்ஞானியாயிருந்து பிறவியாகிய இருட்சாலையிலகப்பட்டு ஆசையாகிய பசாசங்கட்பிடித்துக் கொடிய பாவங்களைச் செய்து மரணாந்தத்தில், எமதூதர்கள் சூலாயுதமுதலானவைகளால் குத்தித் துன்பப்படுத்துவதற்கு ஆளாகும்படி விடாமல் காத்துரக்ஷித்தருளுமையா உமாபதியாகிய நடேசப் பெருமானே! மயக்கம் பொருந்திய ஈஷணாத்திரயமென்னும் பெரிய பாசமாகிய வலையை வளைத்துச் சுரோத்திராதி பஞ்சேந்திரியங்களாகிய வெறிகொண்ட நாய்களையேவிச் சத்தாதி விஷயங்களென்னும் வேட்டையாடிக்கொண்டு அஞ்ஞானமாகிய இருண்மோக வெளியிலிருந்து கூத்தாடிக்கொண்டிருப்பவர்களானாலும் உன் திருப்பெயராகிய பஞ்சாட்சரத்தையேனும் அல்லது அவற்றுள் ஓரெழுத்தையானாலும் ஒருமுறையாவது அபுத்திபூர்வமாகவேனுஞ் சொல்வார்களேயானால் அவர்களைத் தீவினையினின்று நீங்கிக் கருணைவிழியினாற் பார்த்தாதரிக்கும் பெருமானே! தற்பரமாய் சிற்கனமாய் தத்துவாதீதமாய் சிற்பரமாய் விளங்குந் தயாநிதியே அறிவுக் கறிவா யகண்டிதமா யெங்குஞ்செறியும் பரசிவமாய் சர்வபரிபூரணராய் சர்வஞான காரணராய் சர்வலோக நாயகராய், சர்வ ஜீவ தயாபரராய், சர்வதேவ சிகாமணியாய் விளங்கும் பழம்பொருளே!

உன் திருவருணோக்கத்தினால் அடியார்களுடைய சஞ்சித வினைகளழியவும் மும்மலமாகிய இருணீங்கவும், ஞான சூரியன் உள்ளத்திலுதிக்கவும் பஞ்சேந்திரியங்களும் அதன்விஷயங்களுங் கெடவுஞ்செய்து என்றுமழிதலிலாத பிர்மானந்தக் கடலில் மூழ்கச்செய்யுமையா! தேவதேவனே, சர்

வாங்க ரத்தினபரண பூஷணனாகிய சபாபதியே! கோதிலா குணப்பெரி
யோனே! ஞான நாதனே! என்கண்ணே! என்கண்மணியே மாணிக்க
மணியே பொன்னார்மேனியனே! கோமேதக வைடூரிய பவள மரகத புட்
பராக வைர நீலமணியாயிலகுஞ் சோதியே சுடரே சுடர்மணிவிளக்கே!
பூங்கமலத் தயனொடு மாலுமறியாதலையும்படி யெங்கு மொருபடித்தாய்
நின்று விளங்கிய மலைவடிவே! சுடலைப்பொடிபூசிய வண்ணலே தோடு
டைய் செவியனே பகவானே சாமவேதகீதப்பிரியனே மதுரைமாநகராண்
ட மீனாக்ஷியம்மையின் மணவாளனே! அழலாடுமையனே! ஏகாம்பரனே
சொற்பதங்கடந்த சுழுச்சியனே மேகத்தைப்போன்றக் கருமையாகிய கண்
டத்தையுடையவனே! அஷ்டபுயங்களை வாய்ந்தோனே மூவாமுதல்வனே
நீக்கமிலகண்டாகார பரிபூரணமாய்ப் பொங்கித்ததும்பித் தானே தானாய்
நிறைந்தோங்கிநிற்கும் பரமானந்தமே எவ்வுயிருக்குந் தாயாயிருந்தின்பவமு
தளிக்கு மண்ணலே, மறைமுடிவதனில் விளங்கிடுமொளியே நானாவாகத்
தோன்றியிடு நாமரூபமிவ்வையனைத்துந் தானானவனே, சச்சிதானந்த சொ
ரூப செல்வமே சேதனனாகியவெனக்கு உன்னிடத்தில் சதா உண்மையான
பக்தி, குருபக்தி, நித்தியாநித்திய வஸ்து விவேகம், இகமுத்திரார்த்த
பலபோக விராகம், சமாதிசட்கசம்பத்து முதலியவைகளும், முத்திவிருப்
பம், பிர்மஞானம், யோகசாதனம், அடக்கம், நற்கிருத்தியம், பரோபகா
ரம், ஜனனமரணமொழிக்கும் விருத்தி, சர்வபாப காமநிவர்த்தி மனோநாசம்
நிராசை, கிரியாபூசை, யோகபூசை, ஞானபூசை, இவையாதி லட்சணங்
களுமில்லாவிட்டாலும், அவைகளுண்டாகும்படி அனுக்ரஹஞ் செய்து
ஞானபக்தியையும், அதனது நிலையையுங்கொடுத்து ஆண்டருளுமையா
பூலோக கயிலாசமென்று பெரியோர்யாவரும் புகழ்ந்திடுந் தில்லைச்சிற்றம்
பலத்தில் அடியாரின்பொருட்டு ஆனந்தக்கூத்தாடும் புனிதனாகிய நடரா
ஜனே! நாதாந்த நாட்டுக்கு நாயகனே பல்லாயிரங்கோடி பானு வுதித்தாற்
போற் கல்லாலின் கீழிருந்த கண்ணுதலே! இந்திரியங்களாகின்ற பாம்பு
களைக் கொல்லுங் கருடனாகிய நீலகண்டனே! ஆதியந்தரகிதானந்த ஸ்வ
ரூபமானவனே! கோத்துநெளியும் புழுவூத்தை நரம்புகளும் நாற்றமலங்
களும் நிறைந்து அநாசார அசுத்தவுடலைப் பூதபவுதிகாத்மகமாகத் தோற்
றப்படுகிற சகத்தில் இப்போதுநான் சுமந்துக்கொண்டு திரிவதுபோல
இனி அப்படிக்கொத்தவுடலை அடியேனெடாம லிருக்கும்படியாயும் ஒரு
வேளை யப்படியாக ஜனித்தபோதிலுந் திருச்சிற்றம்பலத்துளாடும் உன்
செங்கமலப் பொற்பாதங்களை வணங்கித் துதித்து வாழும்படி யனுக்ரஹஞ்
செய்யுமையா பன்னகா பரணனாகிய பரமசிவனே! ஓம்! பிரம்ம ஞான
சொரூபதாரியே சர்வ சாக்ஷியாய் யாவையும் பார்க்கின்ற சர்வேஸ்வரனே

21



ஸ்பரிசிக்கத் தகாததாயும், மனோ திருஷ்டியினால் காணக் கூடாததாயும், அஞ்ஞானமாகின்ற தானென்றவாணவ கர்வப்பேயினால் அறியக்கூடாததாயும், சைதன்ய வடிவான மங்களமாகிய நிரதிசயானந்த சதோதயமான ஞானப்பிழம்பே தனக்குமேல் பெரியவரொருவருமில்லாதவனே அளவிறந்த பெரியோனே, ஆத்மஞானத்திற்குச் சத்துருவாயிருக்கும் அஞ்ஞான அலகையை ஓட்டும் பூசாரியாயிருப்பவனே ஆகாய தத்துவமாய், சத்த விஷயமாய், சுத்தவெளியாய், சதாசிவ ரூபமாய் அக்கினிமயமாய், நிருமலமாய் நிட்களமாய் நீங்காதசத்தாய் நிகழுணர்வாய், சாந்தமாய் சனாதனமாய் சலனமில்லாச் சுபாவமாய், அருவமதாய், அயலிலதாயமர்ந்துநின்ற வகண்ட சிதாகாயமே! உத்தமர்கட்கு நன்குவெளிப்பட அவருள்ளத்தில் விளங்கியும், அதமர்கட்குச் சிறிதும் வெளிப்படாது மறைந்தும், அவரவர்கள், உயிர்க்குயிராயு மிருப்பவனே, பொன்னினொளியே, பூவின்மணமே, பாலின் சுவையே, கரும்பி னினிப்பே, ஆதித்தனனலே, சந்திரன் குளிர்ச்சியே, பேரின்ப மகிழ்ச்சியே, ஆனந்தமனோரதமே, தோற்றமொடுக்கமில்லாத சுயம்பிரகாசமே, சர்வஞான சொரூபியே, இன்பதுன்பம் பிறப்பிறப்பு யாதுமில்லாத பரம்பொருளே, சகலபுவனத்தினு முயிர்ப்பயிர்தழைப்ப நற்றண்ணளி சுரந்திடுந் தெய்வமே, பல்லுயிர்த்தொகுதியும் பவக்கடலழுந்த அல்லல்செய்யு மாயையெனப்படுங் கொடியப் புலியாகியத் தீமையினின்று நீக்கி என்னையு முன்னையு முள்ளபடி யறிந்துணர்ந்து சிவோகமாகிய ஞானத்தைக்கொடுத்தாண்டருளும் வல்லவனே! தேவர்களில் மஹாதேவனே ஈசர்களில் மஹேசனே விஷயங்களைப்பற்றி ஐம்புல வழியாய்ச் செல்லு மனக்குரங்கை அகத்தடக்கி அமைத்திருத்தி; உன் பாதாம்புஜத்தின் கீழ்வைத்து உன்னைப் போற்றித் தொழுவதற்குத் திறமை யில்லாதப் புலையனாகிய நாயேன் சிவநேசர்களைப்போல வேடங்கொண்டு வணங்குவதாக வுலகோர்க்குக் காட்டும்பொருட்டு; காக்கைக்கறைவதைப்போல வாய்மொழியினாலே தோத்திரஞ்செய்வதனால் என்னைப் பலனடையப்போகின்றேனையனே (ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைப்பேன் ஆண்டநீ யருளிலையானால்) என்ற தமிழ்வேதப்படி; உன் திருவருளென்னிடத்திலுண்டானாலல்லவோ நானுன் தொண்டனாவேன். மனம், வாக்கு, காயமென்னுங் கரணங்களாகிய மாயாகாரியங்களினா லுன்னைப்போற்றாது ஞானமாகிய அறிவே சொரூபமாகப் போற்றினாலன்றோ உன்திருவருள் கிடைக்குமென்று சிவாகமங்கள் நவில்கின்றதே நாயினுங்கடைகெட்ட நாயினேனோ அஞ்ஞானமாகிய ஜீவதசையில் நின்று போதுமான பக்தியில்லாமலும், அடியார் கோலமில்லாமலும், நற்குணமில்லாமலும், வாக்கினால் மௌன மௌனவென்று பார்க்கின்றவர்கள் இவர் சிவபூசையிற் சிறந்தவரென்று

சொல்லும்படி வெளியாடம்பர கோலாகலனும் (படி விபூதியும், பொதி ருத்ராட்சத்துடன்) கூறும் கோடிமந்திர ஜெபதபங்கள் எகுறன மூமக்கு அங்கீகாரமாகப்போகிறது ஆண்டவனே! மாதவமே ஞானமலர்ப் பூர்க்குங் கற்பகத்தருவே! தேவர்கள் வணங்கி சதாவாழ்த்தி உள்ளத்திலே அளவு கடந்த ஆனந்தங்கொள்ளும் பரமேஸ்வரனே! அடியாரிதயக் கமலத்தின் கண் நீங்காத வாசமே! பிரபஞ்சங்களையுஞ் சுகதுக்க வேதனைகளையும் கைவிட்டு மேலாகிய பதவியையடைய விரும்பும் அடியேனுடைய பிறவித் துன்பமெலா மின்றேயோட ஆன்மபோதத்தின் கண்ணதாகிய வாணவ விருளைக் கிழித்தெறிந்து என்னை யாண்டருளுமென்று நான் கேட்டுக் கொள்வதற் கருட்செய்யும் ஸ்ரீ கனகசபேசரே! சர்வஞ்ஞத்துவாதி குண சஹிதனான ஈச்சுரனே! அடியார்க்கெளியவனே! ஆன்மபோதத்துக்கெட் டாத பொருளாகிய பசுபதியே! புண்டரீகபுரமென்னுஞ் சிதம்பரத்தில் சச்சிதானந்தமயமாய் ஞானநடனஞ் செய்யுஞ் சிதம்பரேசனே! கயிலாய மென்னுந் திருமயிலையில் என்தாயாகிய கற்பகவல்லி சமேதனாக விளங் குங் கபாலீசனே! சரீர சம்புடத்துக்குள்ள மணியே! ஜீவன் முத்தர்க ளுக்குத் தெவிட்டாத வினிய திருவருளைத் தந்தருளு ஞானச் செல்வமே! என்னுயிரே! பூரணமான வமிர்தமே! சிவஞான தீபமே! மூலாதாரமாதி யாறுதாரங்களையுங் கற்பனைகளையுங் கடந்துநின்ற ஞானக் கண்ணுடை யோர்களாற் கருதப்படுங் கருணானந்த வாரிப்பெருக்கே!

ஈசான தற்புருட அகோர வாமதேவ சத்யோஜாதமென்னும் பஞ்ச முகத்தையுடைய பரம்பொருளே! அறிவிற்கறிவாயெங்குஞ் செறிந்த சிவ பரஞ்சுடரே! உமாதேவியார் தந்தருளிய சிவஞானப் பாலையுண்ட சம் பந்தப் பிள்ளையார் தமது செவ்வல்லி மலர்போன்ற திருவாயின் வழியே மேகம்பொழியு மழையைப்போற்பெய்தத் திருப்பாடல்களாகிய திராவிட வேதமென்னுந் தேவாரங்களையணிந்த பரமசிவமே! சிவவேடம்பூண்ட மெய்யடியார்கட்கு உள்ளும் புறம்புங் கலந்துள்ளவனே! நாயிற்கடைப் பட்ட யான் நுகராதபோகமில்லை, அடையாத சரீரமில்லை ஆகையால் நா னெடுத்துள்ள கொடியப் பிறவிப் பிணியறும்படி கிருபைசெய்து காத்து ரட்சித்தருளுமையா எனப்பனே! கண்ணேயொளியே கருணையங்கடவுளே!

சர்வானுகூல சர்வவியாப்தி சர்வாந்தரியாமி சர்வமங்கள பஞ்சவிம்ஸதி விக்ரஹசொரூபனே ஸ்ரீ ஜயவிஜயீபவா சர்வசர்வ தூர்வப்ர வுன்னத பரி பூரண வீக்ஷருத்ராக்ஷ மோக்ஷ கடாக்ஷனாய் காலருத்திர கஜமுகஸ்கந்த கால பைரவமூர்த்தியே! அபயம் அபயம்! அடைக்கலம்! அடைக்கலம்!!

சம்போ சங்கர மஹாதேவதேவனே

ஓம் நமப்பார்வதிபதயேநம நமஸ்தே நமஸ்து.

திருச்சிற்றம்பலம்.

180016
23

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

சென்னைத் திருமயிலை
ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞான ஸத்வத்ஸனி.

## விநாயகர் வணக்கம்.

### மும்மௌத்திக மணிமாலை.

கலிநிலைத்துறை.

—(*)—

ஞான முகத்தவ னம்பின் வடியார் நலமீது நீ
தான் முகத்தவன் சருவ சிராசர சமஸ்த வுரு
வான முகத்தவ னசடினை யடக்கிடு மானைமுகன்
மோன முகத்தவன் கழடுதித் தருளன்பில் மூழ்துவமே.

### பன்னிருசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

ஆதிமத் யாந்தமில் லாதபரஞ் சுடரான
வதுலிதனே வகண்டசொரூபா
வமலனே விமலனே சுப்ரதீபப் பரம
வாச்சல்யனே கருணைசூழ்
நீதிநிறை வானகுண நித்யாப ரோட்சமய
நித்தியனே நிகரொன்றிலா
நிமலனே துர்யாதீத சுழுமுனையி லெஞ்ஞான்று
நிலவுங் குண்டலிசத்தியோ
டோதிநட மாடுநல சாதனையிற் றலைமையா
யுள்ளபடி யுணருநிலையி
லோங்காரப் பிரணவ மெனும்பிழம் பானவா
வுயர்கயிலை யெனுமயிலையிற்
றீதிலா வரந்தருகு ஸ்ரீகபா லீசன்மேற்
சிவஞான ஸத்வத்ஸனி

செழுமணிப் பாமாலை சொலவருளு மாஹாரவோம்
சிவசிவ கணநாதனே. (௧)

ஐவரா யைவரு ளமர்ந்தனந்தப் பொருளு
மாகியவை களுங்கடந்த
வற்புதா கரஞான சிற்சொருப மாகிசுகா
னந்தமாய்ப் பந்ததொந்தப்
பொய்யறிவிற் சற்றும் பொருந்தப் படாததாய்ப்
போக்குவர வற்றநிலையாய்ப்
பூரணா னந்தவறி வானந்தத் தத்துவப்
பொக்கிஷமதாய் நிறைந்து
மெய்க்கொண்ட மெய்யழியா மெய்யரிட மெய்யனென
மெய்ப்படும் பரமசுகமே!
வேதவே தாந்தங்கெ வித்தென விளங்குபவா
வியன்கயிலை யெனுமயிலையிற்
றெய்வீக மாயிலகு ஸ்ரீகபா லீசன்மேற்
சிவஞான ஸத்வத்ஸனி
செழுமணிப் பாமாலை சொலவருளு மாஹாரவோம்
சிவசிவ கணநாதனே. (௨)

அகமகிழ்ந் தனுதினமு னாலயம் வலம்வந்து
அஷ்டபுட் பங்கட்சாத்தி
அளவிலா நினதுருவை யோதுமந்திரஞ் சொலி
யநுட்டான மதிற்சிறந்து
சுகபோக பத்திகலை சித்திநிலை வித்தகமாய்த்
தொடர்ந்தொழுகு நாளெந்நாட்
சொல்வரியார் வினையடரை வெல்வரியா ருனதன்பிற்
சூழ்ந்தடியில் வாழ்கவருளாய்
புகலரிய வடிவமே புனிதமே தனிமுதலே!
போர்செய்யுங் கன்மவலியைப்
பொடியாக்கி மிடிபோக்கி காப்பதுன் பாரமே
புகழ்கயிலை யெனுமயிலையிற்
றிகழ்கின்ற பரமான ஸ்ரீகபா லீசன்மேற்
சிவஞான ஸத்வத்ஸனி
செழுமணிப் பாமாலை சொலவருளு மாஹாரவோம்
சிவசிவ கணநாதனே. (௩)

———

# நூல்.

## நிமல மணிமாலை.

பன்னிருசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

—)❀(—

சித்தியெல்லா நிறையு மத்தனே சுகாதீத
தேவமஹா தேவேயென்று
சிந்தையினில் வந்திக்கு மந்தணர்கட் சந்ததந்
திருவுருவைக் கண்டுதொழுகு
முத்தனே முதல்வனே முப்பாச மொடுனைவர்
முன்னேற்ற மடையாமலே
முத்திவச மாகுநல பத்திநெறி பித்தனுற
முக்கண்ணு லுலகைக்காக்கும்
வித்தகா திருவிழி சாய்த்திடா விடிலடியேன்
விதிநீங்கு மதிபெற்றிலேன்
விலையிலா மாணிக்கமே! சிவா னந்தனே!
விகிர்தனே கங்கைவேணி
நித்திய நிராமயா கற்பகவல்லித் தாயுட
னிலவுங்கடவுளே தேவர்க
ணினைவுற்ற துங்கமே யெனைப்பெற்ற தங்கமே!
நிமலனே கபாலீசனே. (க)

தாயாகித் தந்தையாய் சற்குருவுந் தெய்வமாய்
தரணியாண்டிடு மரசனாய்
சமுசார பந்தமாய் மக்கட்சுற்றமு மித்ரர்
சத்ருதுன்பமு மின்பமாய்
காயாகி யிலைபூவு கனியும்பல ருசியாகிக்
கண்விண்ணு மண்ணுமாகிக்
கலையுங்கலை யெழுத்திலக் கணமுமிலட் சணமாகிக்
காண்பானுங் காட்சியாகி
தோயாத சுகமாகித் தொடர்பரிய வடிவாகித்
தொல்லையில் லாததாகித்
தோத்திரசற் பாத்திரதிரி நேத்திர முளதாகிச்
சொல்லுஞ் சொல்லின்முடிவுமாய்
நேயமிகு தூயகற் பகவல்லித் தாயுட
னிலவுங்கடவுளே முனிவர்க

ணினைவுற்ற தங்கமே யெனைப்பெற்ற தங்கமே!
நிமலனே கபாலீசனே, (உ)

அயனைப் படைத்துவன் னவனுக்கு சிருட்டிதொழி
லளித்தனை யவன்கர்விக்க
வைந்துதலை யினிலொன்றைக் கிள்ளினை யெனினுநி
னதுக்ஷேற மெனுந்தொழிற்படி
நயமிகுந்தே சதுர் முகனுக்கி வோர்சிரசை
நலமிகுங் கைக்கொண்டமெய்
நாதனே யன்பர்மனப் போதனே விநோதனே
நான்மறையும் புராணகீதம்
வியப்படும் படியெடுத் தோது ஞானக்கடலே
வள்ளலே யுள்ளமதிலே
வந்துகுடி கொண்டருளு மெந்தையே யுந்தனடி
வாழ்த்துமுறை யென்னறிகுவேன்
நியமமிகு பார்வதி கற்பக வல்லித்தாயுட
னிலவுங்கடவுளே சித்தர்க
ணினைவுற்ற தங்கமே யெனைப்பெற்ற தங்கமே!
நிமலனே கபாலீசனே. (௩)

எட்டப் படாவடிவ மென்பர்சில ரன்பிலார்
யேத்தியெஞ்ஞான்று மறவா
திருதயக் கோயிலில் வைத்தந்த ரங்கமா
யிறைஞ்சிதொழு மெய்யன்பர்கள்
மட்டள விலாத வானந்தங்கொள யிருப்பதாய்
மஹானியர்க ளெடுத்துரைத்தார்
வஞ்சனேன் பஞ்சதுவுந் தீயிற்படும்பாடு
வாய்த்தினைத்தே கொந்தனன்
அட்டாங்க யோகமென்பே னவை வெறுஞ்சொல்லே
யாகும்பல பக்தியென்பே
னதுவும் வாய்ப்பறையாகுந் தானதவ விரதங்க
ளணுவுமறியேன் கதிசொலாய்
கிட்டையது செய்த கற்பகவல்லித் தாயுட
னிலவுங்கடவுளே யாப்தர்க
ணினைவுற்ற தங்கமே யெனைப்பெற்ற தங்கமே!
நிமலனே கபாலீசனே. (௪)

கட்டுப்படா பஞ்ச வேடர்களை வயமாக்கி
    கருத்தையொன்றாக்கி மனதின்
கபடநாடகச் செயலை யதஞ்செய்து நினதுபய
    காலைக்கும்பிட்டு போற்றி
வெட்டுப்பட் டப்பொருள் முளைக்காத வண்ணமாய்
    விதியதை மதியதனினால்
வெல்லுவது யெளிதென சரஸ்வதி யெனுமௌவை
    விளம்பினா ருண்மையெனினும்
மட்டுப் படாதவினை மாயமாங் காட்டிடையில்
    வாழ்கின்ற மிருகநிகராய்
வாழ்நா ளெலாங்கழித் தனனந்தோ யெவரிதை
    மாற்றுவார் பேதைநாயேன்
நிட்ரே மற்றிட கற்பகவல்லித் தாயுட
    னிலவுங்கடவுளே மஹானியர்
நினைவுற்ற தங்கமே யெனைப்பெற்ற தங்கமே!
    நிமலனே கபாலீசனே. (௫)

கற்கண்டு தேனுமுக் கனிபாகு தீஞ்சுவைக்
    கலந்ததென ருசித்துவன்பர்க்
கருத்துளே தித்தித்து காருண்யஞ் சித்தித்து
    காட்சியுட னாட்சிபெற்றா
சொற்கொண்டு யாலையென சூட்டிமகிழ்ந் தன்பதை
    தூபமுந் தீபமாக்கி
துகளுடைய மனதையே பலியாக்கி யைவரைத்
    தொடவரியப் படையலாக்கி
விற்பனக் குணமுடன் பத்தியதி கரித்துன்றன்
    மெல்லடியில் வாழ்வதெந்நாள்
வெகுவெகு வினோதங்கட் காட்டியே மயக்கிடு
    வினைதனை யகன்றுபோற்றி
நிற்குநிலை தருகுங் கற்பகவல்லித் தாயுட
    னிலவுங்கடவுளே ஞானியர்
நினைவுற்ற தங்கமே யெனைப்பெற்ற தங்கமே!
    நிமலனே கபாலீசனே. (௬)

ஆசையெனு முதலைவாய்ப் பட்டந்தோ? அந்தோ?
    அழியாது னுசீர்பெற்ற

அடியார்கட் பாதமென் முடிமீது படவைத்து
னருடனக் காளாக்கிடிற்
பாசையெனுங் கன்மந்தி பட்டழியும் வத்துவெனப்
பறந்தோடிடும் பிழைப்பேன்
பரிதாபம் பரிதாப மெனதுகுறை பரிதாபம்
பார்த்திருப்பதுவு மழகோ?
மாசிலா மணியேமர கதமே வைரேயமே
மதிபச்சை யதிநீலமே
வள்ளலென வுள்ளமதைக் கொள்ளைகொளு மண்ணலே
மண்விண்ணென் றுனவடிவே!
நேசமிகு பூசைசெய் கற்பகவல்லித் தாயுட
னிலவுங்கடவுளே விஞ்சையர்
நினைவுற்ற தங்கமே யெனைப்பெற்ற தங்கமே!
நிமலனே கபாலீசனே, (எ)

பத்திநெறி யொருசிறிது மறிந்திலே னறிந்தவரைப்
பார்த்திலேன் பார்த்தன்னவர்ப்
பாதத்தைக் கும்பிட்டு பணிபுரிந் தடியனெனப்
பற்றுகொண்டே வுழைத்து
முத்திநெறிக் காளாகு முறைமை யென்பதுதெரியா
மூடன்கேடக னூடகன்
மூர்க்கமிகும் புலியென வாக்ரமித் திடுங்கொடியன்
முற்றுமென் குணம்விடமதே
வித்திலா விளைவாகி யாவினுள்ளுங் கலந்து
விளையாடு முன்றன்மகிமை
வீணனெவ் வாறுகண் டுணரவல்லே னிவை
மெய்யன்றிப் பொய்யல்லவே!
நித்திய கல்யாணி கற்பகவல்லித் தாயுட
னிலவுங்கடவுளே தொண்டர்க
ணினைவுற்ற தங்கமே யெனைப்பெற்ற தங்கமே!
நிமலனே கபாலீசனே. (அ)

தடவரைகள் மூன்றையுந் தானகைத் தெரிசெய்த
சங்கரா சமஸ்தரூபா!
சச்சிதா னந்தனே சமயங்க ளனைத்தினுந்
தானமர்ந்தே களித்து

கடம்புரியு மத்தனே ஞானவாழ்வே நல்லோர்
நாட்டமதி லோங்குமொளியே
நவமிகுந் தவத்தினுற் காண்பதென்பார்ப் பொல்லா
நாய்க்குக்கடை யானநாயேன்
புடவிமிஸையிரவுபகற் பொசிப்புக் கலைந்துண்டுப்
போயினவென் வயதனைத்தும்
பொல்லாதவ னிலையி னில்லாதவன் வினைப்
போவதெப்படி சொலாய்? உப
நிடதமுறை செல்வமே! கற்பகவல்லித் தாயுட
னிலவுங்கடவுளே தொழும்பர்
நினைவுற்ற தங்கமே யெனைப்பெற்ற தங்கமே!
நிமலனே கபாலீசனே. (க)

ஆடிபா டிக்களித் தானந்தம் பொங்கியே
யன்புசெய் தவர்கள்முன்ன
மளவிலா வுருகொண்டு காட்சியுடன் மோட்சந்தந்
தாண்டநின் பெருமையெளிதோ?
கூடிசந்தத மன்ப ரஞ்சலி புரிந்திடுங்
கூட்டமதி லெனையொருவனுய்க்
குணப்பட வகுத்திடிற் புண்ணிய முனக்கலோ
கொடியனியான் சொலவேண்டுமோ?
தேடியலை மாலயன் காணாத வடிவமே
சிமிலமென நின்றசிவமே!
சிந்தைவளர் பந்தமற வெந்தையே யுகந்தருள்
தேவதேவர்க்கும் பெரியோய்
நீடிடுங் கருணைசூழ் கற்பகவல்லித் தாயுட
னிலவுங்கடவுளே பக்தர்க
ணினைவுற்ற தங்கமே யெனைப்பெற்ற தங்கமே!
நிமலனே கபாலீசனே. (உ)

—(*)—

## ஹ ர ஹ ர மா லை.

பதினறுசீர்க் கழிநேடி லாசிரிய விருத்தம்,
பண் - நட்டராகம்.

திங்களொளி செஞ்சடையுங் கொன்றை மாலை
செய்யகுண மங்கையுமா தேவி தங்குக்

தேவே யானந்தனேமெய் யன்பர் தங்கட்
சிந்தையைவிட் டகலாத ஞான மூர்த்தி
சங்கரவோம் சம்போசதா சிவமென் றேத்திற்
சனனமெனுங் கடற்கடப்பே னும்ப ராப்தர்
சதுர்மறைக ளுடனனந்த மார்க்க மெல்லாஞ்
சாற்றுகின்ற பலபொருளு மாகி நின்ற
மங்கள குணகரனே மாயவன் கண்
வைத்துதொழ வரமளித்து மகிழ்ந்த நாதா!
மாறுபடுஞ் சமயநிலே வகுத்து பார்த்தால்
வள்ளலே நின்னுருவு மகத்வ மாகு
மங்கையிலே மழுவுடையாய் தலையோ டேந்தி
யைந்தொழிலு மைம்முகமாய் விளங்கு வோனே
அப்பனே கயிலையெனு மயிலை வாசா
ஹராஹர கபாலீச வமரர் வாழ்வே. (க)

சிற்பரமே பொற்பதமே தருகு ஞானச்
செல்வமே செங்கண்மால் விடைமீ தேறுஞ்
சிவசிவா சின்மயனே வுண்ண வுண்ணத்
திகட்டாதத் தீங்கனியே தெய்வக் குன்றே
கற்பனை யெலாங்கடந்தக் கடவுளே முக்
கண்ணுடைய மாமஹேஸ் வரனே மாயக்
கண்ணதினுற் பார்க்கவொண்ணுக் கங்கைவேணி
கருத்தசனுட் கர்த்தனெனக் கலக் துலாவுந்
தற்பரமே தனைப்படைப்பா ரொருவ ரின்றி
சருவமுந் தான்படைத்து தழைத்து நின்ற
சத்துசித்தா னந்தனேமெய்த் தாவுந் தொண்டர்
சாற்றிசதாப் போற்றிகலந் தழைத்து லாவு
மற்புதனே மழுவுடையாய் தலையோ டேந்தி
யைந்தொழிலு மைம்முகமும் விளங்கு வோனே
அப்பனே கயிலையெனு மயிலை வாசா
ஹராஹர கபாலீச வமரர் வாழ்வே. (உ)

தொண்டரடிப் பொடியாக வடிமை செய்யுந்
தூயநெறி வாய்த்திடினே வருட்பெற் றோங்கித்
துங்கமிகு பத்திமுத்தி துலங்கா நிற்பேன்
றொல்லையெலாஞ் சொல்லாதுத் தொலைந்துப் போகும்

கண்டவையுங் கேட்டவையு மனுப வத்திற்
கண்ணில்லான் கனவு மூகை நிலையதாகும்
கரணவா தனையனைத்துங் கடந்து நின்று
கல்லால விருட்சமத னடியி லன்று
யெண்டிசையும் பணி தட்சிணா மூர்த்தியாக
யெழுந்துசொன்ன வொருமொழியி னுள வறிந்தா
லெமனுடைய வலிகொழுத்த மரண மாயை
யெதிர்ப்படுமோ பட்டாலுங் கதியார் காண்பார்
அண்டர்தொழ மழுவுடையாய் தலையோ டேந்தி
வைந்தொழிலு மைம்முகமும் விளங்கு வோனே
அப்பனே கயிலையெனு மயிலைவாசா
ஹரஹர கபாலீச வமரர் வாழ்வே. (௩)

பொன்னொன்றே நகையனந்த மானாற் போல
புரந்தரநீ வொருபொருளே பலபேர்க் கொண்டு
பூசுரரா மெய்யுளத்தா ரிடத்திற் றங்கிப்
புகழணைந்து வனந்தகோல நாம ரூபந்
தன்மைமிகுந் துபாசனா மூர்த்த மாகத்
தழைத்தவனே சங்கரனே சிவ பிரானே!
சன்மநோய்த் தீர்ப்பதற்கு வவிழ்த மான
தகைமேவுந் திருநீறு ஞான்றும் பூசி
சின்மய பஞ்சாக்கரத்தை யோதி யக்கஞ்
சிறக்கவணிந் தேத்திதொழுந் தொழும்ப ருக்கு
செப்பரிய வுருகரந்து சேவை தந்த
செழுஞ்சுடரே செல்வமே தெரிசித் தாரின்
அன்புகொண்டு மழுவுடையாய் தலையோ டேந்தி
வைந்தொழிலு மைம்முகமும் விளங்கு வோனே
அப்பனே கயிலையெனு மயிலைவாசா
ஹரஹர கபாலீச வரரர் வாழ்வே. (௪)

மின்னலது மேகமதில் மறையும் வண்ணம்
மேதினியின் வாழ்க்கையது வாய்க்கு மென்று
விஞ்சையுளோ ரனுபவமா யெடுத்துச் சொன்ன
விபரமதைத் தானறியா ரில்லை யில்லை
என்றாலு மாசைய திழுத்து வாதை
யீவதனா லதன்வழியே சென்று நாளை

யேமனுக்கே செலவழித்தே னிதுமெய் மெய்யே
யெனைப்படைத்துக் காப்பவனி னிச்சை தானோ ?
தன்மமுடன் றானதவஞ் செய்து முன்னோர்
சங்கரனே சுகஞான வாழ் வடைந்தார்
சங்கற்ப வாசனையைத் தலைமீ தேற்றி
சாவதற்கே வுடலெடுத்துத் தயங்கா நின்றேன்
அன்னமகிழ் மழுவுடையாய் தலையோ டேந்தி
வைந்தொழிலு மைம்முகமாய் விளங்கு வோனே
அப்பனே கயிலையெனு மயிலை வாசா
ஹாஹா கபாலீச வமரர் வாழ்வே. (ரு)

கொடுத்தனையே லருளதுவு முனக்கே புண்யங்
கூற்றனில்லை மாற்றமில்லை குறையொன் றில்லை
குணக்கடலே மணக்குடலே கும்பிட் டார்க்குக்
கோதகற்றி சரணளித்தாய்க் கோடி கோடி
படுத்தவன்பாய் விட்டெழாமற் பிணம தாக்கும்
பாழான சாக்காட்டை சிரமேற் றாங்கி
பாபமதிற் றலைவனெனப் படைத்த தென்கொல் ?
பரிதாபம் பரிதாபம் பார்த்த னன்றோ ?
நடுத்திறத்தி னிலைநின்றோர் ஞானி யானோர்
நானென்ப தவர்க்கில்லை சாந்த முண்டு
நாதனென வுருகிசதா நமஸ்கரித்து
நந்தியுடன் வருங்காட்சிக் கண்டேன் றாளை
யடுத்தனர்காண் மழுவுடையாய் தலையோ டேந்தி
வைந்தொழிலு மைம்முகமும் விளங்கு வோனே
அப்பனே கயிலையெனு மயிலை வாசா
ஹாஹா கபாலீச வமரர் வாழ்வே. (சு)

தொண்டத்தொண்ட சலம்வந்தாற் றாகந் தீர்வேன்
றன்பந்தரும் பூதம்வந்தாற் பிழைப்ப தெங்கே
தூயசெப தியானம்பூசை விரத மாசான்
றுணையதுவாய்த் திடமொனுற் றெல்லைப் போகும்
நீண்டமதி யணிந்தவனே நிகரில் லானே
நித்தியாப ரோட்சிதனே நீதி தன்னு
ணின்றவர்க ளிருதயம்விட் டகலா தன்மை
நிலவுகின்றப் பரஞ்சுடரே நியம மற்று

யீண்டியீண் டெடுத்துழலுஞ் சன்மந் தன்னை
யின்னதென்றுக் கண்டுக்கொள வகையென் னுண்டு
யேழையேன் பிழைபொறுத்து விழி பார்த்சாள
யிதுசமயஞ் சரணடைந்தே னுலகுக் கெல்லாம்
ஆண்டவனே மழுவுடையாய் தலையோ டேந்தி
வைத்தொழிலு மைம்முகமும் விளக்கு வோனே
அப்பனே கயிலையெனு மயிலை வாசா
ஹராஹர கபாலீச வமரர் வாழ்வே. (எ)

---

## சிவதோத்திராபரணம்.

—(*)—

### வண்ணச்சந்தம்.

—)‡(—

எங்குநிறைந்து யெவைக்கு முதலவ னுரோ அவனுரோ
ஈசன் கணேசன் குஹேசன் மஹேஸ்வர னுரோ அவனுரோ
தங்கு முயிர்க்கெலாஞ் சீவாதிகாரனிங் காரோ அவனுரோ
சமஸ்தமும் படைத்துத் தான்காத்தழிப்பவ னுரோ அவனுரோ
துங்கமெய்ஞ் ஞான சுயம்பிரகாசனவ னுரோ அவனுரோ
சொல்லும் பலவேத சூக்குமசைதன்ய னுரோ அவனுரோ
செங்கண்மால் நந்திமேல் தெரிசனந் தருபவ னுரோ அவனுரோ
சிவய நமவெனுந் திருவளர் பரசிவமாமே சிவமாமே. (க)

அண்டாண்ட கோளகை யாவையுந் தந்தவனுரோ அவனுரோ
அரியயன் ருத்ரன் மஹேசன் சதாசிவனுரோ அவனுரோ
கண்டவைக் கெல்லாங் கருத்தனுமானவனுரோ அவனுரோ
கண்மூக்கு செவிவாய் கடமாய் தழைத்தவனுரோ அவனுரோ
பண்டை வினைநீக்கிப் பாதந்தருபவனுரோ அவனுரோ
பரம சொரூபியாய்ப் பத்தர்முன் வந்தவனுரோ அவனுரோ
செண்டாடு நந்திமேல் தெரிசனந் தருபவனுரோ அவனுரோ
சித்தியெல்லாநிறை திருவளர்ப் பரசிவமாமே சிவமாமே. (உ)

கந்தனை சம்பந்தனுகவே தந்தவனுரோ அவனுரோ
கட்டுரை சமணரைக் கழுவேறச் செய்தவனுரோ அவனுரோ
சுந்தானிவண்வந்து மணங்கொள வகுத்தவனுரோ அவனுரோ
குலைகோ யாலப்பர் துதித்திட நலந்தந்தோனுரோ அவனுரோ

தந்தைசற் குருவாகி தமிழ்வேத மெழுதினேனோ அவனோ
தட்சணாமூர்த்தியாய் சனகர்க்கருளீந்தோனோ அவனோ
சிந்தையாய் நந்திமேல் தெரிசனந் தருபவனோ அவனோ
தேவருள் மாதேவன் திருவளர்ப் பரசிவமாமே சிவமாமே. (௩)

மனம்புத்தி சித்த மயக்கமுமானவனோ அவனோ
மாயாதிலையு மகிழ்ச்சி புகழ்ச்சியுமாரோ அவனோ
சனன வினைக்காடு தன்னை சுட் டெரிப்பவனோ அவனோ
சகல வுயிர்கட்குந் தாய்தந்தை குருதெய்வமாரோ அவனோ
அனல்சந்திர னாதித்த னவைமூன் றுங் கண்ணனோ அவனோ
ஆலத்தை யமுதாக வுண்டன்று காத்தவனோ அவனோ
சினமின்றி நந்திமேல் தெரிசனந் தருபவனோ அவனோ
சென்ம கன்மமில்லாத் திருவளர்ப் பரசிவமாமே சிவமாமே (௪)

தில்லைவா ழந்தணர் சேவித்த சின்மயனோ அவனோ
திருநீல கண்டத்தாற் றீமையை யகற்றினேனோ அவனோ
செல்வனைச் சமைத்திடத் தின் றுயிர்த்தந்தவனோ அவனோ
திண்ணன்கண் ணூன்ற சீர்த்தி யளித்தவனோ அவனோ
சல்லாபமாய் மூவர்த் தான்பாட மகிழ்ந்தவனோ அவனோ
தாலிவிற் றபிஷேகஞ் செய்திட வுகந்தவனோ அவனோ
செல்வமாய் நந்திமேல் தெரிசனந் தருபவனோ அவனோ
திகழனந்த கோலத் திருவளர்ப் பரசிவமாமே சிவமாமே. (௫)

சலத்தால் விளக்கெரியத் தண்ணவித் தந்தவனோ அவனோ
தன்மனைக் கூந்தலைத் தரவாங்கிக்கொண்டவனோ அவனோ
குலமுங் கோத்திரஞ் சாதி குறிகுண மற்றவனோ அவனோ
கோவணமோடாடைக் கொடுக்கவருடந்தோனோ அவனோ
அலகை யுருவெடுத்த வம்மைக்கு கனியீந்தோனோ அவனோ
அரிவாட்டன் றன்கழுத் தரியக்கைப் பிடித்தவனோ அவனோ
திலகமாய் நந்திமேல் தெரிசனந் தருபவனோ அவனோ
தேடி யிருவர்க்காணாத் திருவளர்ப் பரசிவமாமே சிவமாமே. (௬)

வருடமோர்ப் பாடலாய் மந்திரஞ் சொன்னவனோ அவனோ
மாகுழலூ தியே வர்ணிக்க மகிழ்ந்தவனோ அவனோ
நெருநராம் புத்தரி னிலையை யழித்தவனோ அவனோ
நியமமாய்ப் பாண்டிமா தேவிக்கருட் செய்தோனோ அவனோ
திருநாளைப்போவாரைதேகத்தோடெடுத்தண்டோனோ அவனோ
தேவரு மூவருந் தியங்கிடச் செய்தவனோ அவனோ

தெருளுற நந்திமேல் தெரிசனந் தருபவனுரோ அவனுரோ
செப்பினு முடிவில்லாத் திருவளர்ப் பரசிவமாமே சிவமாமே.(எ)

அன்னைக் கருவினி லழியாமற் காத்தவனுரோ அவனுரோ
அவனியி லனுப்பிப்பி னநுக்ரஹித்தான்பவனுரோ அவனுரோ
சொன்னயம் பொருணயந் தொடர்நய மானவனுரோ அவனுரோ
சுத்த சித்தமதிற் றுலங்கும் பரமானந்தனுரோ அவனுரோ
பொன்னுமண் பூவையர்ப் பொருப்பினில்விட்டவனுரோ அவனுரோ
பொய்யுமெய் வேண்டிலாப் புநிதர்க்குறவானேனுரோ அவனுரோ
சின்மய நந்திமேல் தெரிசனந் தருபவனுரோ அவனுரோ
செழுமறைவடிவானத் திருவளர்ப் பரசிவமாமே சிவமாமே. (அ)

பெரும்பயன் றருஞானம் பேசி பேசாதவனுரோ அவனுரோ
பேதமிலாதவர்க் கலந்திற வாடுவோனுரோ அவனுரோ
உருவெல்லாந் திருநீறே வுயர்கண் ருத்ராக்ஷமாரோ அவனுரோ
ஓதும் பஞ்சாக்கர மைம்பத்தோன் றனவனுரோ அவனுரோ
திருவள்ளுவரைக் கொண்டு திராவிடமறைசொன்னேனுரோ அவனு
செயமிகுசங்கத்தின் றிமையையழித்தவனுரோ அவனுரோ [ரோ
திருதியாய் நந்திமேல் தெரிசனந் தருபவனுரோ அவனுரோ
தேடற்கும் பாடற்குந் திருவளர்ப் பரசிவமாமே சிவமாமே. (க)

பரம பிதாவெனப் பாரெலாங் காப்பவனுரோ அவனுரோ
பலகோடி தேவரைப் படைத்திங்கனுப்பினேனுரோ அவனுரோ
கரதலா கமலம்போற் றெண்டர்கட் கண்டவனுரோ அவனுரோ
கல்லெலாம் லிங்கமாய் காசினிறைந்தவனுரோ அவனுரோ
வரம்பெற்ற முனிவர ராப்தர்முன் வந்தவனுரோ அவ--ரோ
வகுத்திடுஞ் செயலெலா மன்னு மன்--ரோ அவனுரோ
சிரமேந்தி நந்திமேல் தெரிச-- தருபவனுரோ அவனுரோ
செகசீவ பரமாகுந் திருவளர்ப் பரசிவமாமே சிவமாமே. (ம)

எண்ணில--ப் பெயருட னிவண்வந்தப் பரமனுமாரோ அவனுரோ
இகபர சுகதுக்க மேற்றமாற்றமிலானுரோ அவனுரோ
கண்டதுங் கேட்டதுஞ் சபடநாடகஞ்செய்வோனுரோ அவனுரோ
கசிந்துருகிபாடி கலங்கினோர் முனம்வந்தோனுரோ அவனுரோ
புண்டரீகத் தில்லை பொதுநடஞ் செய்தவனுரோ அவனுரோ
பொய்யர்க்குப் பொய்யனுய் மெய்யர்க்கு மெய்யானேனுரோ அவ
செண்டாடு நந்திமேல் தெரிசனந்தருபவனுரோ அவனுரோ [னுரோ
சிந்தைகொண் டேத்திடுந் திருவளர்ப் பரசிவமாமே சிவமாமே()

உடற்பொரு ளாவிமூன்றுகந்து தட்சணைக்கொள்வோனரோ அவன
ஓதும் வேதகீத பூதநாதமானோனரோ அவனரோ [ரோ
கடன்மலை விண்ணுமண் கதிர்மதி மழையவனரோ அவனரோ
கலைநிலை சுழுமுனைக் கலந்த குண்டலிசத்தியாரோ அவனரோ
இடம்பொரு ளேவலா யெவர்க்கும் வழிபட்டோனரோ அவனரோ
இன்பமுந் துன்பமு மில்லானு முள்ளவனரோ அவனரோ
திடமுட னந்திமேல் தெரிசனந் தருபவனரோ அவனரோ
தினகர வொளியாகித் திருவளர்ப் பரசிவமாமே சிவமாமே (௰௨)

கலையினல் மலைவுற்றுக் கலகத்தால் காண்கிலானரோ அவனரோ
கருத்துப்போ லுருகொண்டு காட்சியளித்தவனரோ அவனரோ
நிலையற்ற சடலத்தை நிட்டையா னிலைசெய்வோனரோ அவனரோ
நீநானென் பதிலா நெறியாள ரிடங்கொண்டோனரோ அவனரோ
உலையுற்ற மெழுகென வுருகினோ ருளம்வந்தோனரோ அவனரோ
ஓங்காரப் பிரணவ மூலகுயி ரெனநின்றோனரோ அவனரோ
சிலையென நந்திமேல் தெரிசனந் தருபவனரோ அவனரோ
தெய்வீகமா யெங்குந்திருவளர்ப் பரசிவமாமே சிவமாமே (௰௩)

சொல்லுஞ்சொன் முடிவதுந் தூரஞ் சமீபமுமாரோ அவனரோ
தொண்டர்க ளனுதினந் தோத்திரஞ்செய்பவனரோ அவனரோ
வல்ல சுகானந்த மதிதுதி பதியவனரோ அவனரோ
மனைமக்க ளுறவினர் வாழ்வுந்தாழ்வீபவனரோ அவனரோ
பல்லாயிர நாமம் படைத்து மயக்குவோனரோ அவனரோ
பத்தா பத்தினியெனக் குலவியின்பந்தருவோனரோ அவனரோ
ம...வடாய் நந்திமேல் தெரிசனந் தருபவனரோ அவனரோ
திங்களா...ளிதங்கும் திருவளர்ப் பரசிவமாமே சிவமாமே (௰௪)

அங்கமா யெனைப்பெற்றத் த...ய் வந்தவனரோ அவனரோ
ஆதியநாதிமெய்ச் சோதி சுருதியன... அவனரோ.
...மாயப் புங்கவர்த் தோத்திரஞ் செய்தவனரோ அவனரோ
துணையாயெவ் வுயிருக்கு துலங்கியே யாண்டவனரோ அவனரோ
மங்கள கல்யாண மகத்துவ வள்ளலுமாரோ அவனரோ
மலனெனுங் கவிமாலை மகிழ்ந்தசூடிக்கொள்வோனரோ அவனரோ
செங்கண்மால் நந்திமேல் தெரிசனந்தருபவனரோ அவனரோ
சிவப்ரகாசன்றெழுந் திருவளர்ப் பரசிவமாமே சிவமாமே (௰௫)

—)‡(—

## சிவநிலை சம்பந்தம்.

ஓமெனும் பிரணவத் ததித்த மூன்றெழுத்துளே
நாமதேவர் நமசிவய நாதனுவ ரைவரே
நேமமுற்ற வமரரியாவு நிட்டைகண்ட வத்துவாந்
தேமலர் மணமுமாஞ் சிவம் சிவம் சிவம் சிவம். (௧)

அகாரமா மெழுத்துளே வளவிலா வடிவமாய்
உகாரமா மெழுத்துளே வுடலுயிர்க ளுற்பவம்
மகாரமா மெழுத்துளே மயங்கச்செய்யு மாய்கையே
சிகாரமா மெழுத்தில் மன்னுஞ் சிவம் சிவம் சிவம் சிவம்: (௨)

அண்டரண்ட பிண்டமு மனுதியாதி யானதுங்
கொண்ட கோலமுங்குணங் குறிகள் வேறதானதும்
பண்டையின் வினைநினைவும் பாரதி லெழுந்ததுந்
தெண்டனிட்டோ ருள்ளம்வாழ் சிவம் சிவம் சிவம் சிவம். (௩)

காரணமுங் கார்யமுங் கடந்துநின்ற சோதியாய்
பூரண வனந்தஞானம் பூர்த்தலர்ந்த பூவதாய்
ஆரணங்கட் கோடிகோடி யளவிடாத ரூபமாய்
சீரணிந்த தேவனம் சிவம் சிவம் சிவம் சிவம். (௪)

உலகமோ டுயிரனைத்து மோங்கிநின்று காப்பவன்
சலனமற்றோர்த் தம்மிடத்திற் றுண்டவஞ்செய் சங்கரன்
நலமெலாந்தந் தாட்கொளு நமசிவாய மந்திரன்
றிலகமாக வெங்கணுஞ் சிவம் சிவம் சிவம் சிவம். (௫)

ஐவரான கடவுளாகி வைந்தொழி னடத்தலும்
மெய்யும்பொய் யிரண்டிலா விவேகஞான மானதுஞ்
செய்கையுஞ் செயலுமாய் செனித்தகன்ம மானதுந்
தெய்வமாக நின்றதுஞ் சிவம் சிவம் சிவம் சிவம். (௬)

சருவசீவ ரட்சகன் சதாசிவ சம்பூரணன்
பருவதம்போ லசைவிலாத பக்தியு ணிரந்தரன்
கருணையாளன் காலகாலன் கண்கள்மூன் றுடையவன்
திருவருடந் தாட்கொளுஞ் சிவம் சிவம் சிவம் சிவம். (௭)

ஐந்தெழுத்தி னுண்மையை யறிந்துசேவை செய்தவர்
பந்தபாச மற்றனர் பரமரூபம் பெற்றனர்
கந்தமு மலருமாய்க் கனகமு மொளியுமாய்ச்
சிந்தைதந்து காத்திடுஞ் சிவம் சிவம் சிவம் சிவம். (௮)

வார்த்தையா லெழுத்தினல் வழக்கினல் வாதாடுவீர்
பூர்த்திசெய்து வொன்றையும் பொருத்தங்கொண்டு நிற்கிலீர்
தீர்த்த மூர்த்த க்ஷேத்திரஞ் சிறப்புசெய்து போற்றுவீர்
சீர்த்தியாவு முள்ளது சிவம் சிவம் சிவம் சிவம். (௧)

கோடிகோடி தேவராய்க் குவலயத் துதித்ததும்
ஆடிபாடி வழக்குசெய் தழிந்தகந்தை கொண்டதும்
நாடிநீடி வாழ்வுதாழ்வு நன்மைதீமை விண்டதும்
தேடிகூடி கண்டநோர் சிவம் சிவம் சிவம் சிவம். (௰)

பொய்யுமெய்யும் வேண்டிலார்ப் புகன்றகர்த்த னனதும்
வையமே லளவிடாத மாயரூப நாமமும்
உய்யுநேர்மைக் கொண்டவர்க்கு னுண்மைகாட்டி நின்றதும்
தெய்வீக பரம்பொருட் சிவம் சிவம் சிவம் சிவம். (௰௧)

எண்ணமாகி யெமனுகி யிறப்புடன் பிறப்பதாம்
பெண்ணுமாணும் பெற்றோருற்றோர் பெண்டீர்பிள்ளை சுற்றமாம்
மண்டேகந் தேனையுண்ணுத வாறுபோல் மயங்கிடா
தெண்டனிட்டோர் காணவந்த சிவம் சிவம் சிவம் சிவம். (௰௨)

அலைகடந்த வெள்ளம்போ லறிவொடுங்கி நின்றதும்
உலைகடந்த மெழுகெனு வுருகிதன்னை யுணர்வதும்
கலைகடந்து நிலைகடந்து கருத்துணின்ற வல்லுனர்
சிலைகடந்து மலைகடந்த சிவம் சிவம் சிவம் சிவம். (௰௩)

ஏறயேற வுச்சிசென் றிருப்பிடத்தைச் சேர்ந்திடிற்
றூரபார வீரபூர காரசாரங் கொண்டிலார்
மாறமாற புத்திசித்த மாய்கையாற் கெடுவேதாற்
சீறலூறன் மாய்த்திடுஞ் சிவம் சிவம் சிவம் சிவம். (௰௪)

மானைப் பார்த்தால் மான்வருகு மாய்கையு மவ்வண்ணமே
ஆனைப்பார்த்தா லாடதாமோ? அப்படியே சன்மமும்
பூனைப்பார்க்க யெலிபிழைத்தற் பொய்யெனச் சொல்லாதெவர்
தேனையுண்ணற் புண்யமாஞ் சிவம் சிவம் சிவம் சிவம். (௰௫)

வித்தெலாம் விளைந்ததும் விளைந்துகொள்ளைப் போனதுஞ்
சத்தசத் துணர்ந்துமுத்தி சார்ந்தானந்தங் கொண்டதும்
மத்தர்பேயர் பாலராகி மௌனவாழ்வி னின்றதுஞ்
சித்தெலா நிறைந்ததுஞ் சிவம் சிவம் சிவம் சிவம். (௰௬)

ஆக்கலு மழித்தலு மனுக்ரஹித்து காத்தலு
நீக்கலு நிலைத்தலு நினைந்தவைப் பாழாக்கலும்

போக்கலும் புணைத்தலுமெய்ப் பொய்யதாய் முடித்தலுந்
தேக்கலுந் தெளிதலுஞ் சிவம் சிவம் சிவம் சிவம் (௰எ)

ஆட்டுகின்றவ னிலாது யாரோயிங்க ஞடுவோர்
கூட்டுகின்றவ னிலாது யாரோயிங்ஙன் கூடுவோர்
ஊட்டுகின்றவ னிலாது யாரோயிங்கு னுண்ணுவார்
சேட்டை மூட்டை காட்டுடை சிவம் சிவம் சிவம் சிவம். (௰அ)

சிவயநமவோ மெனமுப்போதுந் திருவெண்ணீ றணிகிலீர்
அவத்திலுங்க ளுளைப்போக்கி யறிவிழந்து மாளுவீர்
சிவமும்போக சவமதாகத் தெரிந்துஞ்சடங்கு செய்குவீர்
திவசந் திதியும் நாளுங்கோளுஞ் சிவம் சிவம் சிவம் சிவம். (௰கூ)

இருந்தகுருவிப் பறந்துப்போன விடந்தெரிய மாட்டிலீர்
வருந்திகூண்டை சுட்டுதீட்டு வந்ததாய்த்தலை முழுகுவீர்
பொருந்திநின்று யீசன்றுளைப் போற்றிமுத்தி சேர்கிலீர்
திருந்தியுள்ளம் போற்செயுஞ் சிவம் சிவம் சிவம் சிவம். (உ௰)

குருவிலாத சீடருண்டு கோடிகோடி வையமே
லருளிலாதப் பாடலுண்டு வாயிரங் கணக்கதாய்
பொருளுட னருளும் வாய்க்கப் புண்ணியப் பயனஃதே
தெருளருள வல்லதாஞ் சிவம் சிவம் சிவம் சிவம். (உக)

கும்பற்கூடிக் குந்தி தின்றுக் கூட்டமோடிப் போனது
நம்பினவர்க் கைவிட நடுத்தெருவி னின்றதும்
பம்பரம்போ லாடிவோய்ந்து படுத்துறங்கி மாண்டதுந்
தெம்படாமற் சாலஞ்செய் சிவம் சிவம் சிவம் சிவம். (உஉ)

ஏசிவீசி யெங்ஙனு மெதிர்த்துவாது பேசலாங்
கூசிகூசி குழந்தைபோற் குணங்கொள முடியுமோ?
சீசீவாழ்வுந் தகமுஞ் சிறப்பும்வேண்டா ரெங்குளார்
தேசிகனுஞ் சீடனுஞ் சிவம் சிவம் சிவம் சிவம். (உங)

ஆண்டவ னனுபவிக்க யாரைக்கேழ்க்க வேண்டுங்காண்
தூண்டிற்பட்ட மீனைப்போற் றுடிதுடித்தா லென்பயன்
ஈண்டுமாண் டெடுத்த சென்ம மெத்தனைத் தெரியுமா?
தீண்டொணுத வத்துவாஞ் சிவம் சிவம் சிவம் சிவம். (உச)

வந்ததுஞ் சிறந்ததும் வாழ்வுதாழ்வுக் கொண்டது
நொந்ததும் வலிதுபேசி நுணலைப்போலக் கெட்டது
மெந்தவா றெழிந்ததென்று யேக்கத்தா லிடிந்ததுஞ்
சிந்தையெல்லாங் கண்டது சிவம் சிவம் சிவம் சிவம். (உரு)

அன்னைதந்தை யாருளா ரநாதியான தேவர்க்கு
பன்னுமுலக சிவரியாவும் படைத்துக் காப்போனவனலோ?
உன்னைப்போல பரனை யெண்ணி வுளறிவீணே சாகின்றாய்
தின்மைநீக்கி னன்மைதருகுஞ் சிவம் சிவம் சிவம் சிவம் (உசு)

சூரியனொன் றாதற்போல சூக்ஷ்மரூபி யொருவர்தான்
காரியமொன் றாதற்போல கடவுளாவ ரொருவர்தான்
பேரிசைத்து பேதஞ்சொன்னாற் பெரியோரொப்புவார்களோ?
சீரிசைத்தால் முத்தியாஞ் சிவம் சிவம் சிவம் சிவம். (உஎ)

சத்தியமுஞ் சாந்தமே தயாபரனின் பொக்கிஷம்
எத்திகத்தி கொத்திகுத்தி யீண்டுவுண் டிளைத்தலும்
பித்துநோய்ப் பிடித்ததாற் பினத்திநாளைப் போக்கலுஞ்
சித்தம்போலச் செய்திடுஞ் சிவம் சிவம் சிவம் சிவம். (உஅ)

ஆதவன்போ லறிவினி லமர்ந்துவுண்மைக் காண்பதும்
வேதமோதி பேதஞ்சொல்லி வேட்கைமாயங் கொண்டதும்
வாதுபேசி யேசிலையயோ மண்ணுாற் தீயுண்டேய்த்ததுஞ்
சேதுபதி ராமன்போற்றுஞ் சிவம் சிவம் சிவம் சிவம். (உகூ)

புண்ணியத்தில் வந்தசன்மம் புண்ணியத்தை முடித்தன
கண்ணியத்தில் வந்தசன்மங் கௌரவத்தி னின்றன
எண்ணிடி லூழைப்போலாகு மெவர்தடுக்க வல்லவர்
திண்ணிய வலியுளது சிவம் சிவம் சிவம் சிவம். (௩௰)

ஆசையுண்டு பூசைசெய்ய வருளுமன்பு வேண்டுமே
காசுவுண்டு நன்மைக்குதவ கருத்தும்பொருத்தம் வேண்டுமே
பேசலுண்டு சைவநூலைப் பேசப்புண்ணியம் வேண்டுமே
தேசுயர்க் கலையெல்லாஞ் சிவம் சிவம் சிவம் சிவம். (௩க)

உலகெலா மினுக்கிலே வுடலெலாம் பொசிப்பிலே
குலமெலாம் பணத்திலே குணமெலா நலத்திலே
சலனஞ்சஞ் சலத்திலே சமஸ்தமும் பரத்திலே
திலகம்போ னிறைந்திடுஞ் சிவம் சிவம் சிவம் சிவம். (௩உ)

ஞானஞ்ஞான மாமிதென்று நாடெலாம் பறப்பலாம்
மோனமோன மாமிதென்று மூலைதேடிப் படுக்கலாம்
மானயீன மாமிதென்று வாடியோடி நிற்கலாந்
தேனுங்கைக்க வைத்திடுஞ் சிவம் சிவம் சிவம் சிவம். (௩௩)

கொண்டுகொண்டு விற்றுவிற்றுங் கோணிநிறைய வில்லையே
மொண்டுமொண்டு வுண்டதால் மூளைத்ததெல்லாந் தொல்லையே

விண்டுதொண்டு செய்தபேர் விவேகிக ளுணர்ந்தனர்
திண்டியிண்டுமெண்டிலா சிவம் சிவம் சிவம் சிவம். (௩௪)

வெள்ளைப் பஞ்சில் வர்ணபேதம் வேசிபோல் மயக்கலும்
கள்ளும்பாலும் வெண்மையாகக் கண்முனுகத் தோற்றலும்
எள்ளு மெண்ணெய்ப் போலுமீச னெவ்விடத்து முள்ளதாற்
றெள்ளிய வறிவிற்காண் சிவம் சிவம் சிவம் சிவம். (௩௫)

செல்வமே படைத்தபேர் திருப்பணிக் குதவினர்
செல்வமே படைத்தபேர் செழுங்குணம் படைத்தனர்
செல்வமே படைத்தபேர் செலவின்றிப் புதைத்தனர்
செல்வஞானச் செல்வமாஞ் சிவம் சிவம் சிவம் சிவம். (௩௬)

அன்புவொன்றே பரமனுக்கு வபிடேகம்பூசை யர்ச்சனை
அன்புளார்மே லருளைத் தூவி யவனும்பின்னே திரிகுவன்
வன்மநெஞ்சங் கபடனோரை வாட்டிநரகிற் றள்ளுவான்
சென்மகன்ம மிரண்டிலா சிவம் சிவம் சிவம் சிவம். (௩௭)

ஐந்துபூதம் படையலா மறிவேதீப மர்ச்சனை
சிந்தையேநற் பீடமாகுந் தீர்த்தமே கண்ணீரதாங்
கந்தமோடு பஞ்சகௌவியங் காமமற்ற வார்வமே
செந்தமிழ்க் கவிமாலைகொள் சிவம் சிவம் சிவம் சிவம். (௨௮)

உன்னைநீ கொலைச்செய்தா யுடலுயி ருண்டாக்கினை
வின்னமாக்கிக் கொண்டநீ விவேகியைப்போற் பேசுராய்
மன்னநீ வுண்டதெலா மலமாய்ப்போச்சு வழக்குண்டோ?
சின்னபுத்திக் ககப்படா சிவம் சிவம் சிவம் சிவம். (௩௯)

சரிதைகிரியை யோகஞானஞ் சாற்றுகின்ற படியிலொன்
றுரியவர்க ளவைநிலையி னுதவிபெற்று வாழ்குவார்
பிரிந்திடார்க ளீசனருளைப் பிறந்துவாதை யடைகிலார்த்
தெரியும பறக்குங் காகவேகஞ் சிவம் சிவம் சிவம் சிவம். (௪௰)

இன்பதுன்ப மொன்றிலா னெவனவனே மெய்ப்பரங்
கன்மமென்ப தொன்றிலா னெவனவனே கடவுளாம்
முன்னும் பின்னுமொன்றிலா னெவனவனே முத்தனும்
சென்மமென்ப தொன்றிலான் சிவம் சிவம் சிவம் சிவம். (௪௧)

பாட்டுப்பாடி ஆட்டமாடிப் பாதகத்தில் மூழ்கினை
தேட்டநீடிக் கூட்டமாறித் தெளிவிலா துழைத்தனை
நாட்டநாடி ஞானியோரை நக்குச்செய்ய முந்தினை
சேடடையொன்றும் வேண்டிலா சிவம் சிவம் சிவம் சிவம். (௪௨)

நட்டுமுட்டு சுட்டுகெட்டு நாட்களோடிப் போனதும்
பட்டுதுட்டு செட்டுவிட்டுப் பரதேசியா யானதும்
நெட்டுபிட்டு மட்டுதொட்டு நிட்டையிலுட் பட்டதுந்
திட்டுயெட்டு மானது சிவம் சிவம் சிவம் சிவம். (சங)

பாடைகற்று மேடையேறிப் பாடைப்பேசும் பாவிகாள்
பாடைகற்று வீடைபெற்று பாடைவிட்டு நீங்கிலீர்
ஆடையற்றப் போதுன்கதி யந்தோவந்தோ துக்கமே
சேடையற்ற நாடகன் சிவம் சிவம் சிவம் சிவம். (சச)

தொன்னையுள்ளே யின்ப பண்டந் தோன்றுமாறு வுன்னுளே
கன்னலங் கனிரசம்போற் கலந்துளான் சிவபிரான்
உன்னை நீயே பார்த்திடி லூத்தைப்பிணமு நாற்றமே
சின்னமே திருநீறுஞ் சிவம் சிவம் சிவம் சிவம். (சரு)

மலைமீதேறி மறைந்திட்டாலும் வல்வினைவிட் டோடுமோ?
கலையெலாம் படிக்கினுமெய்க் கண்டுணர லாகுமோ?
நிலையைவிட்ட பின்புநோன்பு நேடவுண்டோ நியாயமே
சிலையைப்போ லிருப்பதே சிவம் சிவம் சிவம் சிவம். (சசு)

உள்ளசிலது சொல்லினே னுளதுக்கோடி கோடியே
கள்ளநெஞ்சிலாதுக்கற்றுக் கடவுளடிக் காளாகுமின்
வள்ளலறிந்து வாழ்வுத்தாழ்வும் வகுப்பனென்னும் வேதமே
தெள்ளியமெய்ஞ் ஞானமீயுஞ் சிவம் சிவம் சிவம் சிவம். (சஎ)

சுந்தர வடிவினன் சுகாநுபோக சங்கரன்
வந்தனஞ்செய் தேத்தினர்முன் வந்துவரங்க ளீபவன்
பந்தநீங்க சிவப்ரகாசன் பாடற்கொண்டு போற்றுவீர்
சிந்தைமன்னு மெய்ப்பரஞ் சிவம் சிவம் சிவம் சிவம். (சஅ)

ஐங்கர னரன்முருக னம்மையுமா தேவியுந்
துங்கவள்ளி தெய்வயானை சுகமயில்வேல் நீறக்கந்
தங்குசமய குரவரடியார் தழையிக் நூலிற்குதவினோர்
திங்கட்போல வாழ்கவருட் சிவம் சிவம் சிவம் சிவம். (சகூ)

ஸ்ரீ கபாலீஸ்வரரின் சிவஞானஸத்வத்ஸனி
ஸமாப்தம்

ஓம் நமப்பார்வதி பதயே நம: அரஹர மஹாதேவா
திருச்சிற்றம்பலம்

—)‡(—

ஜெகநாதபுரம்.

தன்மீகர். தி. வெ தம்புசாமிபிள்ளை
அ. கா. இரங்கசாமி பிள்ளை
சி. ச. மாதவதாஸ் (கல்கத்தா)
கோ. கோதண்டசாமி பிள்ளை
பெ. கிருஷ்ணசாமி பிள்ளை
வீ. க. முனிசாமி பிள்ளை
க, ந. வீ. த. பெருமாள் பிள்ளை

கருக்காத்தம்மன்கோவில்வீதி

ஸ்ரீ சிவத்யான பஜனை ஸ்தாபகர்
வீ. நா. இராகுவேல் பிள்ளை
க. மு. பஞ்சாட்சரம் பிள்ளை

பிரம்பூர் ஏகாந்தவீதி

R. M. முனிசாமி பிள்ளை

டாக்டர் சாமிநாய்க்கன்வீதி

N. ஆளவந்தார் தாசர்
செம்மநகர். சி. வெங்கடாசலம் பிள்
" சி. தாழுமலை பிள்ளை [ளை

கீழ்ப்பாக்கம் பேட்டைவீதி

ஸ்ரீ சிவானந்த பக்த பஜனை
ஸ்தாபகர் பொ. ஏ. மதுரைபிள்ளை
மூப்பர் பெ. மு. பாளையம் பிள்ளை
" ஆ. செ பொன்னப்பன்பிள்ளை
காரியதரிசி. திருவன்பாக்கம்
காஞ்சிபுரம். திரு. வி சின்னத்தம்பி
உபாத்தியாயர் சம்பிராதி [பிள்ளை
சோதிடர் செ ப. சந்திரகாசம் பிள்
ஆலோசனைத்தலைவர் [ளை
செ. நா இராகுவேல் பிள்ளை

விசாரணைத்தலைவர்

கு. க. முனிசாமி பிள்ளை
திறவுகோலர் வீ. முருகேசம்பிள்ளை
தண்டல் செ. நா. கதிர்வேலுபிள்ளை
பிள்ளை. மு. குப்புசாமி பிள்ளை

கொண்டிமாநகர்.

கி. வீ. செ. தாமோதரம பிள்ளை
அமைந்தகரை தே. முனிசாமிதாசர்
சேத்துப்பேடு. சங்கநாச நாயுடு

சேத்துப்பேடு

ச. மு. சிங்காரவேலு பிள்ளை
ச. நாராயணசாமி பிள்ளை
கி. மா. வே. குழந்தைவேலு பிள்ளை
அ. பொன்னுசாமி பிள்ளை
அ. எதிராஜலு பிள்ளை
மு. பாளையம் பிள்ளை

ஸ்ரீ விநாயக பக்தபஜனை

மூப்பர் கு. வீ. சுப்ரமண்யம் பிள்ளை
செ. அ. தங்கவேலு பிள்ளை
க. கணேசன் பிள்ளை

கன்னிமாநகர்.

தன்மீகர். வா தெ. ஜெகநாதம் பிள்
மு. அப்பாசாமி பிள்ளை [ளை
விஜய. வெ. ஆ. முருகேசம் பிள்ளை
க. ஜான் திருவைகா பிள்ளை
ஜோ. அந்தோனி பிள்ளை
ஏ. மா. சிங்காரவேலு பிள்ளை
C முனிசாமி பிள்ளை
கி. க மு. நத்தானியேல் பிள்ளை
M முருகேசம் பிள்ளை

பொன்னுநகர்

ஸ்ரீ சிவசுப்ரமண்ய தியான பஜனை
கிராமம் வெ பா. முருகேசம்பிள்ளை
த. மு. முனிசாமிபிள்ளை வால்டேர்)
இரா. பொன்னுசாமி பிள்ளை
து. விஜயராகவலு பிள்ளை
அ. குழந்தைவேலு பிள்ளை
ஆற்காடு. மு. மதுரை பிள்ளை
அ. பி ஆரோக்கியசாமிபிள்ளை
ஸ்ரீ பாலசுப்ரமண்யராலயம் [ள்ளை
உபகாரிய தரிசி திரு ம. அப்பாசாமிபி

சென்னை பிராஜாநுகூலசங்கம்

காரியதரிசி த. சின்னையா பிள்ளை
S M S நாராயணசாமி பிள்ளை
ப. கனகசபை பிள்ளை
நுங்கம்பாக்கம் அ. ஏழுமலை நாய்க்
நுங்கம்பாக்கம் கிராமவீதி [கர்
பெ. மா. அருணாசலம் பிள்ளை
தி. சுந்தரம் பிள்ளை

சாலை தேவனும்பேட்டை

ஸ்ரீசிவத்யானாநந்தசித்விலாசபஜனை
ஸ்தாபகர் இரா அ. சண்முகம்பிள்ளை
ஏ. சம்பு பிள்ளை
முத்துவேலு பிள்ளை

வன்னியதேவனும்பேட்டை

பொ. முருகேசப் பண்டிதர்
நல்லான்பதி. ப. முனிசாமி பிள்ளை

வேளாளத்தேவனும்பேட்டை
அ. பொன்னுசாமி பிள்ளை
மு. மு. துரைசாமி பிள்ளை
R. முனிசாமி பிள்ளை
அயிரந்தீபநகர்.
கெண்டி அ. முனிசாமிபிள்ளை
R. தம்பியப்பன் பிள்ளை
K. V. வீரராகு பிள்ளை
கல்கத்தா ஸ்ரீ கணநாதசபை
ஸ்தாபகர் S P. இராவணன் பிள்ளை
துலுக்கன்தோட்டம்
T. ஆறுமுகம் பிள்ளை
மக்கிமாநகர் த. இர. கணபதிபிள்ளை
" K. அப்பர்சாமி பிள்ளை
" கோ. வீ. சபாபதி பிள்ளை
" சு. தாண்டவமூர்த்தி.
" பூ. கணேசன் பிள்ளை
அமீர்நகர். க. முருகேசம்பிள்ளை
மக்கிமாநகர்ஆற்றூர் ஸ்ரீசிவப்ரகாச
சித்தி விநாயக பக்த பஜனை
ஸ்தாபகர் வீ. ஐயாக்கண்ணுபிள்ளை
மூப்பர் அ. பொன்னரங்கம் பிள்ளை
தண்டல் இரா. பொன்னுசாமிபிள்ளை
மவுண்ட்ரோட் ஜெசன்ஸ்வீதி
ஸ்ரீ சிவப்ரகாச சுந்தரஞான
பக்தாமிர்த பஜனை ஸ்தாபகர்
ஏ. மா. தங்கவேலு பிள்ளை
உபாத்யாயர் பெ. வரதரா ஜுபிள்ளை
சம்பிரதி கோவில் அர்ச்சகர்
மு. அண்ணாமலை பிள்ளை [ள்ளை
பொக்கிஷர். மா. பொன்னுசாமி பி
அடியார்கள். வீ இராமசாமிபிள்ளை
" சிதம்பரம் பிள்ளை
" பா. முனிசாமி பிள்ளை
" பெ. பூங்காவனம்பிள்ளை
" மா வேலன் பிள்ளை
கிருஷ்டப்பன் செட்டிவீதி
ஸ்ரீ பாலசிந்தாமணி விநாயக
பக்த பஜனை ஸ்தாபகர்
காவேரிப்பாக்கம்
பெ. சின்னசாமிபிள்ளை (சப்ளையர்)
காரியதரிசி மொ. முருகேசம்பிள்ளை
உபாத்யாயர் சி. சுப்ரமணியம்பிள்ளை

மல்லிகாபுரம்
ஜோதிடர் கா. சி. முனிசாமிபிள்ளை
கீரைமாநகர் இர முருகேசம்பிள்ளை
ஆல்தோட்டம்
ஸ்ரீ சிவகணேச பக்த சமவாயம்
அழர்தகவி இரா. பொன்னுசாமிபிள்
வீ. வடிவேலு பிள்ளை [ளை நீலகிரி
க. தம்பியப்பன் பிள்ளை வேலூர்
மா. இராமசாமி பிள்ளை
ஏ. இராஜகோபால் தாசர் காசிப்பூர்
செ. மாணிக்கம் பிள்ளை
மு. காளிபிள்ளை
து. வாசுதேவ மூர்த்தி
வி. ஏ. சுப்ரமணியம் பிள்ளை
பொ வீரராகவலு பிள்ளை
பா. சதானந்தம் பிள்ளை
ஸ்ரீநடராஜ பக்த பஜனை
பொ. மு. நடேசம்பிள்ளை என்கிரே
மு கிருஷ்ணசாமி பிள்ளை [வர்
மா. உலகநாதம் பிள்ளை
மா. இரத்தினசாமி பிள்ளை
ஷெடியூர் அ பொன்னம்பலம் பிள்ளை
சப்ளையர் ஏர்தூர். ப. முனிசாமி பி
சி. மு. நாராயணசாமி பிள்ளை [ள்ளை
மு. சொக்கலிங்கம் பிள்ளை
பாங்கிமலை. பா. இராகவலு பிள்ளை
பா. கணேசன் பிள்ளை
ஐ. மா. தங்கவேலு பிள்ளை
இராயபேட்டை
சோதிடர் மு. முத்துசாமிபண்டிதர்
இல. இர முருகேசம் பிள்ளை
க. ந. வீ. தம்புசாமிபிள்ளை (உரிகம்)
சி. ஏகாம்பரம் பிள்ளை
ஸ்ரீ சிவப்ரகாச பக்த பஜனை,
ஸ்தாபகர் சோ. பூங்காவனம்பிள்ளை
சாணுந்தப்பம்
கி. ச அ. ஏகாம்பரம் பிள்ளை
காட்டுக்கோவில் சந்தவெளி வீதி.
கிராமம். M. முனிசாமி பிள்ளை
மு. சிராளன் பிள்ளை
துயப்பேட்டை வீராபெருமாள்வீதி
உபாத்தியாயர். மு. முருகேசம்பிள்
Mechanical Govt [ளை

பைகிராப்வீதி P சின்னசாமிபிள்ளை
ஸ்ரீ வல்லாளக்கணபதிபக்தபஜனை
ஸ்தாபகர் ஆ. வ. இரத்னநந்தமூர்த்
தன்மீகர். A. டேவிட்பிள்ளை [தி
துடிமேதகம். M. முனிசாமிபிள்ளை

அடையாறு கிராமவீதி

ஸ்ரீ சித்திகணேசபக்தபஜனை
ஸ்தாபகர். சி. முருகேசம் பிள்ளை
பிள்ளை, ம. உலகநாதம் பிள்ளை
ஸ்ரீ வேதவினோத விநாயக பஜனை
ஸ்தாபகர் க. குப்புசாமிபிள்ளை [ளை
பிள்ளைகள் வே. கி. வரதராஜலுபிள்
" இரா. ஆறுமுகம் பிள்ளை
" ம. மதுரை பிள்ளை
அடையாறு வ. வ. சிங்காரம் பிள்ளை
" வே. சண்முகம் பிள்ளை
" பொ. செல்லப்பன் பிள்ளை

நாராயணசாமிதோட்டம்

ஐ. க. மாசிலாமணிபிள்ளை கல்கத்தா
மா. சாமிநாதம் பிள்ளை
ஸ்ரீ விநாயக மஹோத்ஸவ சபை.
மூப்பர் வீ இரங்கசாமி பிள்ளை
மூப்பர் கோ. முனிசாமி பிள்ளை
ஸ்ரீ சிவகணேச தியானபஜனை
அங்கம் து. துரைசாமி பிள்ளை

ஊநர் எல்லிட்தோட்டம்

ஸ்ரீ சுந்தர விநாயகாலய ஆதீன
தர்மகர்த்தா செ பொன்னுசாமி பி
உதவி தர்மகர்த்தா [ள்ளை

இராபர்ட்ஸன்பேட்டை

க. முருகேசம் பிள்ளை

திருமயிலை மேட்டுவீதி

தா. பொ. முருகேசம் பிள்ளை
செ. பெ. இராஜு பிள்ளை
ஸ்ரீ சிவகணேசபக்த பஜனை
ஸ்தாபகர் தா. பொ. கந்தசாமிபிள்
மு. இராஜு பிள்ளை [ளை

கோன்றைமாநகர்

மயிலை. வே. பொன்னுசாமிபிள்ளை
மயிலை K. C. வெங்கடாசலம்பிள்ளை
கொ. மா. முனிசாமி பிள்ளை ஆசன்
வாலாஜாபேட்டை [சோல்[டர்
அ. அண்ணாமலைதேசிகர் கண்ட்ராக்

நரசிம்ஹபுரம்.

ஸ்ரீ சிவஞான பக்தஜன சபை
ஸ்தாபகர் வீ. கோவிந்தசாமியார்
காரியதரிசி பெ. இரத்னசாமிபிள்ளை
பொக்கிஷர் நா. முனிசாமி தேசிகர்
திறவுகோலர். வீ. சுப்ரமண்ய சிவம்
சம்பிரதி பொ. சி. முனிசாமிபிள்ளை
தண்டல் அ. பொ. இராகவலுபிள்ளை
அர்ச்சகர் மாணிக்கவாசகம்பிள்ளை
திருப்பணி ஊழியம் கல்லாய்அம்மாள்
ஆலோசனை. M. முனிசாமிபிள்ளை
திறவுகோலர் D. மதுரநாயகம்பிள்ளை
அங்கத்தினர் ஆ. சுப்ரமண்யம்பிள்ளை
" க. முனிசாமி பிள்ளை

புதுப்பேட்டை

பண்டிதசங்கீதவித்வான் சிதம்பரம்
இஷ்டலிங்கம் பிள்ளை
பாலகவி அ. ந. முருகேசம்பிள்ளை
வெ. கங்காதரம்பிள்ளை டிரைவர் S.
அ. கதிரேசம் பிள்ளை [I. R.
கோ. கந்தசாமிபிள்ளை என்கிரேவர்
ம. ர. ஸ்ரீநிவாசலு தாஸ்
எழும்பூர். சு. செ. மாணிக்கம்பிள்ளை
" N. பச்சையப்பன் பிள்ளை
" வி. சுப்ரமண்யம் பிள்ளை
நரியமாநகர் மு. ஆறுமுகம் பிள்ளை
" V. மதுரைமுத்து பிள்ளை

சிந்தாதரிப்பேட்டை

ஸ்ரீ துயர்தீர்த்த விநாயகாலயம்
திருப்பணி செ. தருமலிங்கம்பிள்ளை
" எ. சி. சண்முகம்பிள்ளை
" அ. மு. தங்கவேலுபிள்ளை
ஷியூர் த. இரங்கசாமி பிள்ளை
பாலசங்கீத T. R. தியாகராயம்பிள்
டிரைவர். இராஜு நாயுடு [ளை
ஆ. பழனிமுதலியார் (ஆசன்சோல்)
மேட்டுவீதி P. சுப்ரமண்யம்பிள்ளை

புளியந்தோப்பு

கா. சின்னமதுரை பிள்ளை
நெட்டால் ஸ்ரீ சித்தி விநாயக
சிவசாதன்தவசங்க ஸ்தாபகர்
புரசை சைவ சி. வீ. பாலகிருஷ்ணம்
புரசை சி. வீ. பாபுபிள்ளை [பிள்ளை

18004



## கையொப்பக்காரர்கள் நாமதேயம்.

புரசை. R. பாளையம் பிள்ளை வால்
மண்ணடி சவரிமுத்துவீதி [டேர்
திருப்போரூர் வள்ளுவ சத்திரத்தின்
தலைவர். வீ. முக்குந்த பிள்ளை
செ. அருணாசலம் பிள்ளை
T. மாணிக்கம் பிள்ளை
வெங்கடேசமேஸ்திரி வீதி
துளிர்க்காணம் பிள்ளை
பெத்துநாய்க்கன்பேட்டை [கர்
ஸ்ரீ சமயபுரத்தம்மன் ஆலய தன்மீ
B. V. R கருணாகரம பிள்ளை
ஷெயூர் அ வேதாசலம் பிள்ளை
இராயபுரம் சயிற்றுகிடங்கு
இந்துபக்த பால்யசபை
க. வே. அர்ச்சுனன் பிள்ளை
கொ. சி. பாலசுந்தரம் பிள்ளை
சி. கோவிந்தராஜலு பிள்ளை
வீ. பெருமாள் பிள்ளை
ச. சண்முகம் பிள்ளை
ஷெயூர் பு. வே. சாரங்கபாணிபிள்ளை
" பெ முனிசாமி பிள்ளை
இராமபுரம் நாகவல்லியம்மன்வீதி.
ஸ்ரீ வரசித்தி விநாயகர்பஜனை
ஸ்தாபகர் சோ. தி. அப்புபிள்ளை
மூப்பர். மு. பெ. முருகேசம் பிள்ளை
காசிமேடு. சின்மயானந்த பஜனை
மூப்பர் இரா. சுப்ரமண்யபிள்ளை
ஷெயூர் மா. வைதியலிங்கம் பிள்ளை
சின்னமலை. ந. முனிசாமிபிள்ளை
பிநங்காசயிலம்
சர்க்கரை நாட்டாண்மைவீதி
S. N. வடிவேலு பிள்ளை
ஆர்மேன்வீதி
கிராமம். P. இரகுபதிபிள்ளை
மாரீசன்வீதி மு. கைலாசம் பிள்ளை
டிரைவர் லயின் சமரச ரத்நாகரம்
C. K. மங்களேஸ்வரம் பிள்ளை
பிரம்பூர் விநாயகபுரம்
S. இலாசர் பிள்ளை (கல்கத்தா)
பிரம்பூர் வேணுகோபால் தெருவு.
வீ. முனிசாமிபிள்ளை ஆசன்சோல்
கல்கத்தா காலின்ஸ்வீதி
A. துரைசாமிபிள்ளை ஆசன்சோல்

காலாமட்டிய
R கோபால்சாமிபிள்ளை ஆசன்சோல்
பூவை சின்னமாங்காடு
ச. இரங்கசாமி பிள்ளை
பூவை, மு. வீ. பழனி பிள்ளை
செங்கற்பேடு
தெ. முருகேசம் பிள்ளை
காஞ்சிபுரம் திருவன்பாக்கம்
ஸ்ரீ சிவப்பிரகாச ராமாநுஜ
பக்த பஜனை ஸ்தாபகர்
சொ. நடேசம்பிள்ளை
உரிகம் கிளப் P. சபாபதி பிள்ளை
மாரிகுப்பம்
T. ஆதிமூலம்பிள்ளை பொன்னுநகர்
அரக்கோணம் கீழ்வீதி.
சி. இராஜாபாதூர்
குன்னூர் ஜெனரல்சப்ளையர்
கிராமம் S. குழந்தைவேலு பிள்ளை
பண்டிதர் R நாராயணசாமிபிள்ளை
நீலகிரி
இந்து ஆரியமத சித்தாந்த சபை
மூப்பர் B. சுந்தரம பிள்ளை
சூப்ரெண்டெண்ட் ஸ்னோடன்
K. M பாலகுமரு பிள்ளை
ப்ளவர் காட்டேஜ்
B. S. ஜெகநாதம் பிள்ளை
நீலகிரி இராயல் கன்பெக்ஷனர்
Y. ஆறுமுகம் பிள்ளை
Y. A. நாராயணசாமி பிள்ளை
நீலகிரி ஷாப்கீப்பர்
G. R ஜேம்ஸ் பிள்ளை
பஸ்மாதூர் பெ. ஏகாம்பரம் பிள்ளை
நீலகிரி பார்வர்ட் ஏஜெண்ட்
R. வேலாயுதம் பிள்ளை
காந்தல் V. I. முனிசாமி பிள்ளை
நீத்தி A. திம்மப்பன் பிள்ளை
நீலகிரி வண்டிசோலை
ஸ்ரீ ராமாநுஜ பக்த பஜனை
ஸ்தாபகர் A. சாரங்கபாணி பிள்ளை
A. S இராமச்சந்திரம் பிள்ளை
B. S குருநாதம் பிள்ளை
சென்னை சேத்துப்பேடு
M. V. கிருஷ்ணசாமிபிள்ளை



